விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 20 புதன்கிழமை (06.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

வங்காளவில் தாழமுக்கம்

## பலத்த மழை பெய்யக்கூடும்

சூறாவளி அபாயம்

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக வலுவடையக்கூடும் என்பதால் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ▶23

சஜித்தை ஆதரித்த தமிழரசுக் கட்சியின் முடிவு

## மக்களை பார்க்காது கட்சியை முன்வைத்து பார்க்கும் செயலாகவே உள்ளது – விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க இலங்கை தமிழரசுக் கட்சி எடுத்த முடிவானது மக்களை முன்வைத்துப் பார்க்காது, கட்சியை முன்வைத்துப் பார்க்கும் செயலாகவே உள்ளது என வடக்கு மாகாண சபையின முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் நாங்கள் பக்கச் சார்பாக அல்லாது ஒரு யதார்த்தமான ஒரு தீர்வை எடுத்திருக்கின்றோம்

வெளிப்படையாக என்னென்ன



தென்னிலங்கையில் அரசியல் அதிர்வலை

# சுதந்திரக் கட்சியை மீட்கும் போராட்டத்தில் சந்திரிகா

## குழப்பத்தில் மகிந்த அணியினர்



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட ஆலோசகரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலான மாநாடு நேற்று சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட மாநாடு தென்னிலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இரு வாரங்கள் உள்ள நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மீட்கும் போராட்டத்தில் சந்திரிகா ஈடுபட்டுள்ளார்.**

மாநாட்டில் பாரிய அளவிலானோர் கலந்து கொண்டமை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் மீது அதிருப்தி அடைந்த உறுப்பினர்களே நேற்றைய மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் எடுத்த தீர்மானத்திற்கு எதிராக இந்த மாநாடு நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய பாராளு ▶23

கொற்றாவத்தையில்

## 23 பவுண் நகை வீடு உடைத்து திருட்டு

(கரணவாய்)

வீட்டில் இருந்தோர் அலுவலகம் சென்றதை சாதகமாக பயன்படுத்தி பட்டப்பகலில் கதவினை உடைத்து உள் சென்ற திருடர்கள் அங்கிருந்த 23 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொற்றா ▶23

புனர்வாழ்வளிக்கப்பட்ட

## 20 பட்டதாரிகளுக்கு அரச வேலை

அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட 20 பட்டதாரி இளைஞர்களை வேலை வாய்ப்பு திட்டத்தில் சேர்ப்பதற்கும் அவர்களுக்கு வேலை வழங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த இளைஞர்கள் 20 பேருக்கும் புனர்வாழ்வு திணைக்களத்தால் புனர்வாழ் ▶23

வாள்வெட்டு, கொள்ளையுடன் தொடர்புடைய

## ஆவா குழு உறுப்பினர் வினோத் நீதிமன்றில் சரண்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் ஈடுபட்ட பிரதான நபரென கருதப்பட்ட ஆவா குழு உறுப்பினர் வினோத் மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்துள்ளதாக ▶23

சிங்களவரை ஏமாற்றி சமஷ்டியை

## பெற சுமந்திரன் முயற்சி

மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் சிங்கள சமூகத்திடம் ஒரு கருத்தினை குறிப்பிட்டு ஏமாற்றி தமிழ மக்களுக்கு சமஷ்டியாட் ▶23

நாய் குறுக்கே பாய்ந்ததில்

## விபத்துக்குள்ளான இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் ▶23

## 2015இன் பின்பே தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது

மட்டக்களப்பில் பிரதமர் ரணில்

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் பாதுகாப்பு 2015 ஆம் ஆண்டின் பின்னரே உறுதிப்படுத்தப்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுத்திப்படுத்தும், தேர்தல் பிரசார கூட்டம் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி ▶23

## கூட்டமைப்பின் பாராளுமன்ற கூட்டம் இன்று

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் யாரை ஆதரிப்பதென்பது ▶04

## நகர அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கத் தயார்

கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

உலகின் புதிய தொழில்நுட்ப முனனேற்றங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி ▶04

## சஜித்தின் கொள்கை திட்டம் சிறப்பானது

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

(கொழும்பு)

இரு பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தை கவனத்தில் ▶23

இலங்கைக்குள் அதிகாரத்தை பகிர்ந்து

## நாட்டின் ஐக்கியத்தை பாதுகாப்பேன் – சஜித்

(கொழும்பு)

சமஷ்டி வழங்க சஜித் பிரேமதாஸ தயாராகுவதாக பொதுஜன பெரமுன ▶23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி க.எழிரசன் அவர்களின்
மாமனார்

**அமரர் செல்லையா சிவசம்பு**

அவர்கள் 05.11.2019 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை**

(872)

## முகாமைத்துவ உதவியாளர் தேவை

இந்து பௌத்த கலாச்சார பேரவையின் இரண்டாம் மொழி கற்கை நிலையத்தின் யாழ். மாவட்டதில் உள்ள தலைமை காரியாலயத்திற்கு முகாமைத்துவ உதவியாளர் தேவை.

விண்ணப்பதாரர் G.C.E A/L அடைந்திருத்தல் வேண்டும்.

வயது 25 தொடக்கம் 35 வரை.
ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
கணினி அறிவு விஷேட தகைமையாக கருதப்படும்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
விண்ணப்ப முடிவுத்திகதி **20.11.2019**

**மின்னஞ்சல் முகவரி -**
**mtsintlegalassociation@gmail.com**
**தொடர்புகளுக்கு : 077 271 1181, 076 181 4183**

**இந்து பௌத்த கலாச்சார பேரவை**
**தலைமை காரியாலயம்**
**சங்கானை வீதி, அச்சுவேலி.**

(874)

## மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண

# 24 மணி நேரமும் இயங்கும் கண்காணிப்புக்குழு - சஜித்

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் திகதி தன்னை ஜனாதிபதியாக நாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தான் பதிவியேற்கும் தினம் ஜனாதிபதி கண்காணிப்பு படைப்பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புதிய தொழிநுட்ப திட்டத்தின் ஊடாக சகல பிரதேச செயலாளர் பிரிவுக்ளிலும் மக்களின் பிரச்சினைகள் எவ்வளவோ பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் எத்தனை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை கண்காணிப்பதற்கு வேறு ஒரு குழுவினையும் சேவையில் இணைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அந்த கண்காணிப்பாளர்கள் 365 நாட்களும் 24 மணி நேரமும் இயங்குவதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (ம)

## எனது கணவர் குளிக்கவே மாட்டார்

# விவாகரத்து கேட்டு பெண் ஒருவர் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தனது கணவர் குளிப்பதில்லை என்ற காரணத்தை தெரிவித்து யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பெண் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்திருப்பது தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் தனது சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஊடாக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவில், எனது கணவர் குளிப்பது இல்லை என்று காரணத்தை கூறி விவாகரத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்டு இருக்கிறார். இந்நிலையில் குறித்த பெண்ணின் கணவர் தனது சட்டத்தரணி ரி.கணதீபன் ஊடாக மனைவியின் விவாகரத்து கோரிக்கையை ஏற்றுக்கொண்டு வழங்குவதற்கு எதிர் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில் மனு மீதான விவாதம் நேற்று நடத்தபட்டது. இதன்போது. யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் குறித்த மனுவை தள்ளுபடி செய்தது.

நீங்கள் காதலித்து திருமணம் செய்வீர்கள். பின்னர் குளிக்கவில்லை போன்ற சட்டத்தில் கூறப்படாத காரணங்களைக் குறிப்பிட்டு மண.நீக்கம் கேட்டு வந்தால் நீதிமன்றம் கட்டளை ஆக்க முடியாது என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமகமலன் தனது கட்டளையில் தெரிவித்துள்ளார். (ம-3)

## மரண அறிவித்தல்

### மங்கையர்க்கரசி (நவமணி) சச்சிதானந்தராஜா

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வட்டு கிழக்கு, சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி (நவமணி) சச்சிதானந்தராஜா 2019.11.02 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தராஜா அவர்களின் அன்பு மனைவியும் பாஸ்கரன் (புள்ளிவிபர உத்தியோகத்தர், மன்னார்), கஜேந்திரா (பொறியியலாளர், இலங்கை மின்சார சபை), ஷங்கரி (ஆசிரியர், யா/ விக்ரோறியாக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனுஷா (பல் வைத்தியர்), ஸ்ரீகந்தராசா (காமதேனு களஞ்சியம், சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், போதிகஜனா, ஹிமவந்தன், பயோதரீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 2019.11.03 அன்று வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

தகவல் -
குடும்பத்தினர்

(C-8142)

## RAVEENS EMC – KARAVEDDY

YEAR 6 ADMISSION 2020
(RESULTS SHEET)

| No | Name | Total | Rank | Scholar Ship Marks | School |
|---|---|---|---|---|---|
| 1 | M.Anbini | 161 | 1 | 170 | J/ Vada.H.P |
| 2 | T.Biranavan | 151 | 2 | 182 | J/ M.Vid |
| 3 | S.Asvinthas | 144 | 3 | 177 | J/ M.Vid |
| 4 | E.Akilash | 136 | 4 | 188 | J/ M.Vid |
| 5 | S.Nithura | 132 | 5 | 171 | J/ T.S.M.V |
| 6 | N.Kirujan | 120 | 6 | 160 | J/ N.M.M.T.M.S |
| 7 | K.Anushthan | 118 | 7 | 171 | J/ K.H.P.S |
| 8 | T.Akshara | 113 | 8 | 160 | J/ N.M.M.T.M.S |
| 9 | K.Sriram | 104 | 9 | 166 | J/ J.C.C |
| 10 | U.Abishaa | 102 | 10 | 178 | J/ M.Vid |
| 11 | J.Lathurshan | 102 | 11 | 154 | J/ M.Vid |
| 12 | M.Saruka | 102 | 12 | 163 | J/ N.M.M.T.M.S |
| 13 | S.Addchayan | 96 | 13 | 155 | J/ M.Vid |
| 14 | K.Danushi | 92 | 14 | 155 | J/ M.P.S.V |
| 15 | K.Thivisna | 78 | 15 | 155 | J/ V.P.S |
| 16 | T.Anojan | 76 | 16 | 159 | J/ M.Vid |
| 17 | J.Akzaya | 75 | 17 | 157 | J/ V.H.P |
| 18 | M.Thenoh Jerry | 74 | 18 | 158 | J/ S.H.C |
| 19 | K.Nishani | 69 | 19 | 156 | J/ M.Vid |

| | |
|---|---|
| J/ M.Vid | J/ Manikkavasagar Vid. KVD |
| J/ N.M.M.T.M.S | J/ Nelliady M.M.T.M.S |
| J/ T.S.M.V | J/ Thumpalai sivapirakasa M.V |
| J/ K.H.P.S | J/ Kokuvil Hindu Primary School |
| J/ J.C.C | J/ Jaffna Central College |
| J/ M.P.S.V | J/ Melai Puloly Saivapragasa Vid |
| J/ V.P.S | J/ Vigneswara Primary School |
| J/ S.H.C | J/ Sacred Heart College |
| J/ V.H.P | J/ Vada Hindu Primary School |

**P.Easwaranathan**
**[ (B.Sc Hons) Agric Dip.in.Edu] Director**
**021 226 3321**

(C-8140)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

### சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2020-31.12.2020 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகை கேள்வி அறிவித்தல், மீள் கேள்வி அறிவித்தல் - 2020

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-06.11.2019 இல் இருந்து 19.11.2019 பி.ப 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-20.11.2019 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-20.11.2019 காலை 10.30 மணி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் ,மீள் கேள்விகள் 03.10.2019 ஆம் திகதிய வலம்புரி தினக்குரல், பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு,மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ,அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

மாட்டிறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ.இல | குத்தகை விபரம் | 2020 இல் ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(வரிகள் நீங்கலாக) | மாத வாடகை(வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 630,500.00 | 6,400.00 | 500.00 | 100.00 |
| 2 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 560,600.00 | 5,650.00 | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 3 | உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 589,200.00 | 5,900.00 | 500.00 | 100.00 |
| 4 | அந்திரான் மாட்டிறைச்சிக்கடை | 685,600.00 | 6,900.00 | 500.00 | 100.00 |
| 5 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 532,900.00 | 5400.00 | 500.00 | 100.00 |

மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | குத்தகை விபரம் | 2020 இல் ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(வரிகள் நீங்கலாக) | மாத வாடகை(வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை -துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட(அங்காடி நீங்கலாக) | 7,893,500.00 | 79,000.00 | 1000.00 | - |
| 2 | கோயிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 159,800.00 | 1,600.00 | 500.00 | - |
| 3 | கொட்டடிச்சந்தை | 6,550.00 | 500.00 | 500.00 | - |
| 4 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 53,600.00 | 550.00 | 500.00 | 100.00 |
| 5 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 217,200.00 | 2,200.00 | 500.00 | 100.00 |
| 6 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 523,300.00 | 5,300.00 | 500.00 | 100.00 |
| 7 | நெல்லியடி மீன் சந்தை | 749,000.00 | 7,500.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 8 | உடுப்பிட்டி சந்தை | 871,500.00 | 8,800.00 | 500.00 | - |
| 9 | அந்திரான் சந்தை | 103,050.00 | 1,100.00 | 500.00 | - |
| 10 | நவிண்டில் சந்தை | 13,200.00 | 500.00 | 500.00 | - |
| 11 | மண்டான் சந்தை | 47,250.00 | 500.00 | 500.00 | - |
| 12 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 290,500.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 13 | உடுப்பிட்டிச்சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 146,000.00 | 1,500.00 | 500.00 | - |
| 14 | சாண்டா சந்தை கோழிக்கடை | 66.600.00 | 700.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 15 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 44,000.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 16 | துன்னாலை வடக்குச் சந்தை | 64,200.00 | 650.00 | 500.00 | |

க.த.ஐங்கரன்,
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி-8132)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2020 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம்திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 06.11.2019 - 19.11.2019 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 20.11.2019 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 20.11.2019 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,035,500.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 97240.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 2,564,572.50 | 250.00 |
| 4 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 37,800.00 | 250.00 |
| 5 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,205.67 | 250.00 |
| 6 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 211,050.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 44,992.50 | |
| 2 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,350.00 | |
| 3 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 37,170.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 764608.95 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2019.10.10ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல், உதயன் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-8134)

### 268 கோடி ரூபா பெறுமதியான

# 224 கிலோ ஹெரோயினை கைப்பற்றியது கடற்படை

### 7 பேர் கைது; பல சாதனங்களும் மீட்பு





(கொழும்பு)

தெற்கு கடற்பரப்பில் 268 கோடி ரூபாய் பெறுமதியான 224 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை கடற்படையினர் கைப்பற்றினர்.

படகொன்றிலிருந்து குறித்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டதுடன், அதன்போது அப்படகில் இருந்த ஐவரும், அப்படகிலிருந்து கரைக்கு ஹெரோயின் தொகையை எடுத்துவர அந்த நேரம் மீனவப்படகை நெருங்கிய டிங்கிப் படகில் இருந்த இருவருமாக 7 சந்தேக நபர்கள் இதன்போது கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் இசுறுசூரிய பண்டார தெரிவித்தார்.

பாகிஸ்தானிலிருந்து குறித்த போதைப் பொருள் எடுத்து வரப்பட்டதாகவும் சர்வதேச கடற்பரப்பில் வைத்து மீனவப் படகுக்கு வேறு கப்பலில் இருந்து அந்த ஹெரோயின் மாற்றப்பட்டிருக்க வேண்டும் எனச் சந்தேகிப்பதாகவும், இதனுடன் தொடர்புடைய அவ்வலையமைப்பின் இலங்கைப் பிரதிநிதிகளான மூன்று முக்கிய சந்தேகநபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் நேற்று நண்பகல் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகரவும் கடற்படைச் பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் இசுறுசூரிய பண்டாரவும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு விடயங்களை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 7 நபர்களையும், கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகு, டிங்கிப் படகு மற்றும் செய்மதி தொலைபேசி ஒன்று, 7 கையடக்கத் தொலை பேசிகள், ஜீ.பி.எஸ். உபகரணங்கள் மூன்று போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

# ஆட்சி அதிகாரத்துக்காக அடி பணிந்த சஜித்


### யாப்பா குற்றச்சாட்டு

(இராஜகிரிய)

ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகளுக்கு சஜித் பிரேமதாஸ அடிப் பணிந்து விட்டார் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன குற்றம்சாட்டினார்.

இராஜகிரியவிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - பொதுஜன பெரமுனவின் ஒன்றிணைந்த ஊடக சந்திப்பு மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். (இ-7)

# ஸ்மித் அதிரடி பாகிஸ்தானை வீழ்த்தியது அவுஸ்திரேலியா



கான்பெர்ராவில் நடைபெற்ற 2-வது இருபது-20 கிரிக்கெட் போட்டியில் ஸ்மித்தின் அபார ஆட்டத்தில் அவுஸ்திரேலியா எளிதில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2-வது இருபது-20 கிரிக்கெட் போட்டி கான்பெர்ராவில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பட்டிங்கைத் தேர்வு செய்தது.

பாபர் அசாம், பகர் ஜமான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். பகர் ஜமான் 2 ரன்னில் அவுட் ஆனார். அடுத்து வந்த ஹரிஸ் சோஹ்ஹல் 6 ரன்னிலும், முகமது ரிஸ்வான் 14 ரன் னிலும், ஆசிஃப் அலி 4 ரன்னிலும் வெளியேறினர்.

பாபர் அசாம் 50 ரன்கள் எடுத்த நிலையில் ரன்அவுட் ஆனார். இப்திகார் அகமது அதிரடியாக விளையாடி ஆட்டமிழக்காமல் 34 பந்தில் 62 ரன்கள் விளாச பாகிஸ்தான் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 150 ரன்கள் சேர்த்தது.

பின்னர் 151 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா சேஸிங்கை தொடங்கியது. டேவிட் வார்னர் 20 ரன்னிலும், ஆரோன் பிஞ்ச் 17 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

3-வது வீரராக களம் இறங்கிய ஸ்மித் ஆட்டமிழக்காமல் 51 பந்தில் 80 ரன்கள் குவிக்க அவுஸ்திரேலியா 18.3 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 151 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

முதல் போட்டி மழையால் கைவிடபட்டதால் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என முன்னிலைப் பெற்றுள்ளது.

## கூட்டமைப்பின் ....

குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ அறிவித்தல் நாளை அல்லது நாளை மறுநாள் வெளியாகுமென தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றாக புளொட் அமைப்பின் உத்தியோகபூர்வ முடிவு நேற்று, இரா.சம்பந்தனிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் கூடிய புளொட்டின் மத்தியகுழு, சஜித்தை ஆதரிப்பதென முடிவு செய்திருந்தது. அந்த முடிவு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமது நிலைப்பாடு குறித்து தனித்து அறிவித்தல் விடும் திட்டம் புளொட்டிடம் இல்லை. கூட்டமைப்பாகவே அதன் முடிவு வெளியாகவுள்ளது.

இதேவேளை, ரெலோ அமைப்பு இன்று தனது இறுதிமுடிவை எடுக்கவுள்ளது. ரெலோவின் தலைமைக்குழு கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியாவில் இடம் பெறவுள்ளது. இந்த கூட்டம் முடிவடையும் வரை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ முடிவு அறிவிக்கப்பட மாட்டாது.

இதேவேளை, இன்று மாலை 6 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் இடம்பெறவுள்ளது. இரா.சம்பந்தனிற்கு அரசு வழங்கிய பங்களாவில் இந்தக் கூட்டம் இடம்பெறும். இந்த கூட்டத்தின் பின்னர் கூட்டமைப்பின் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

எனினும், ரெலோவின் தலைமைக்குழுக் கூட்டம் வவுனியாவில் 2 மணிக்கு நடைபெறவுள்ளதால், ரெலோ எம்.பிக்கள் இந்த கூட்டத்தில் பங்குபற்ற வாய்ப்பில்லையென தெரிகிறது. (ம-3)

## மக்களைப் பார்க்...

நன்மைகளைத் தரமுடியும் என்று கூறாதிருக்கும் வேட்பாளரிடையே நாங்கள் தேர்ந்தெடுத்து இவர்கள் தான் தருவார்கள் இவர்களின் மூலம் தான் பெறமுடியும் என்று கூறமுடியாத நிலையில் உள்ளபடியால் நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம்.

ஏற்கெனவே சில நன்மைகளைப் பெற்ற காரணத்தினால் தமிழரசுக் கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்திக்கக்கூடும்.

ஆனால் நான் இதை எவ்வாறு எதிர்பார்ப்பது? நாங்கள், முன்னர் சேர்ந்திருந்த கட்சிகள் இப்போது சேர்கின்றார் திரும்பவும் பிரிகின்றார்களே என்று பார்க்கவேண்டும். இதற்குக் காரணம் மக்களை முன்வைத்துப் பார்க்காது கட்சியை முன்வைத்துப் பார்க்கும் போது இந்தப் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். தமிழ் மக்களின் வருங்காலம் என்பதை மட்டும் முன்வைத்து நாங்கள் நடவடிக்கைகளை எடுத்தோமானால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது. நான் தமிழரசுக் கட்சிக்கு அ்தை இதை சொல்லவேண்டிய அவசியம் இல்லை

நான் வந்ததே தமிழரசுக் கட்சியின் ஊடாக. அவர்கள் கருத்துக்களில் மாற்றுக் கருத்துக்கள் இருந்தமையினால்தான் நான் வெளியில் வந்து இன்னொரு கட்சியை ஆரம்பிக்கவேண்டும் என்ற நிலைவந்தது. பல்கலைக்கழக மாணவர்கள் இது சம்பந்தமாக என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள் என்பதை பொறுத்துத்தான் இது சம்பந்தமான கருத்துக்களை வெளியிட முடியும். எந்த ஒரு கருத்தும் எமது ஒற்றுமையை சிதைக்கக் கூடாது என்பது எனது கருத்து.

மேலும், தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு சில கடப்பாடுகள் இருக்கின்றன. கடந்த ஒரு வருடத்தில் பார்த்தீர்களானால் தற்போதைய அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பணத்தைக் கொடுத்து மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை செய்கின்றார்கள். ஆகவே ஒரு விதத்தில் அவர்கள் பணத்தைக் கொடுத்து தங்கள் பக்கம் இழுத்து விட்டார்கள் போன்று தெரிகின்றது. எங்களோடு சேர்ந்து ஒருமித்துப் பயணிப்பதாக கூறியிருந்தார்கள்.

ஆனால், அவர்களுக்கு இருக்கும் கடப்பாடை ஒட்டி அவர்களின் தீர்மானத்தில் இருந்து விலகி சில நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள். இது எவ்வளவு காலம் இருக்கும் என்று தெரியாது. வருங்காலம் ஒற்றுமையை இழந்துவிடும் என்று நினைக்கின்றேன். ஒரு கட்சி தங்களின் கருத்தை வெளிப்படுத்திய படியால் மற்றக் கட்சிகளும் தங்களின் கருத்தை வெளியிடக்கூடும். ஆனால் இதில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. அவர்கள் எதை எங்களிடம் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை வைத்து எங்களுடைய நடவடிக்கைகள் இருக்கும் என்றார். (ம)

## நாட்டின் ஐக்கியத்...

ஓயவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பதில் வழங்கினார்.

ஒருமைப்பாடான இலங்கையை உருவாக்கும் போது ஒருமித்த இலங்கையை எதற்காகவும் வலுவிழக்க செய்யாது ஒருமித்த இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து, நாட்டின் சுயாதீனத்தை, நாட்டின் ஐக்கியத்தை பாதுகாப்பது தனது பொறுப்பு மற்றும் கொள்கை என சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, ஐக்கியம் என்ற வார்த்தையை தூக்கிப்பிடித்து பெடரல் என்ற போர்வையைப் போர்த்த முனைவதாக சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

சஜித் பிரேமதாசவிடம் 'பெடரல்' (Federal) என்பது இல்லை, எப்போதும் பெடரல் ஸ்ரீலங்கா தொடர்பில் செயற்படவில்லை. ஒன்றிணைந்த, ஒருமித்த இலங்கைக்காகவே செயற்படுவதாக அவர் மேலும் கூறினார்.(ம-3)

## நகர அபிவிருத்....

எதிர்கால நகர அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகியங்கணை ஹசலக பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# யாழ். இந்து

## ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் என்.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பொறியியலாளர் ஏகாம்பரநாதன் ஜெகதீசன் கலந்து கொள்வார்.

பரிசில்களை மருத்துவர் திருமதி நளாயினி ஜெகதீசன் வழங்கிவைப்பார். (ம)

# சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடிப் பகுதிக்கு பொறுப்பான

## தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை

கம்பெரலியத் திட்ட நிதி மூலமாக வீதிகளை புனரமைக்கும் போது அதற்கான மதிப்பீடுகளை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நேரடியாக சென்று பார்வையிட்டு மதிப்பீடு தயாரிக்காததன் விளைவாக சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கைதடி பகுதியில் உள்ள வீதியொன்று 14மீற்றர் தூரம் புனரமைக்கப்படவில்லை என சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதாக கடந்த 3ஆம் திகதி செய்தி ஒன்று வலம்புரியில் வெளிவந்திருந்தது.

இருப்பினும் இவ்வாறானதொரு சம்பவம் கைதடிப் பகுதியில் இடம்பெறவில்லை என நான் உறுதிப்படுத்துகிறேன்.மேலும் கள நிலவரங்களை பார்வையிடாமல் பிரதேசசபையில் இருந்தவாறு மதிப்பீடுகளை தயாரிப்பதில்லை.அவ்வாறான சம்பவம் இடம்பெற்றால் ஆதாரத்துடன் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என கைதடிப் பகுதிக்கு பொறுப்பான சாவகச்சேரி பிரதேசசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தனது ஊடக மறுப்பறிக்கையில் தெரிவித்துள்ளார்.(ம-30)

# வட்டுக்கோட்டை தபாலகத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தபாலகத்திற்கான நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று (06.11.2019) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இவ் நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மற்றும் யாழ்.அரசாங்க அதிபர் வேதநாயகன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைப்பார்கள். (ம)

## கல்லாறு காட்டுப் பகுதியில்

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவின் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. றுவான் தலைமையிலான அணியினர் நேற்றைய தினம் கல்லாறு காட்டுப்பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சட்ட விரோதமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப் பட்டது.

இதன்போது 20 லீற்றர் கசிப்பும் ஒரு மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கையின்போது சந்தேகநபர் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

இவர் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (ம-316)

# எம்.சி.சி, எட்கா, சோபா ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றில் இரு நாட்கள் விவாதம் அவசியம்

## சபாநாயகரிடம் சாந்த கோரிக்கை



(இராஜகிரிய)

மிலேனியம் சவால்கள். எட்கா மற்றும் சோபா ஒப்பந்தங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் இரு நாட்கள் விவாதத்தை முன்னெடுத்து. பாராளுமன்ற உறுப்பினர்களின் விருப்பை அறிய நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார. சபாநாயகருக்கு கோரிக்கை விடுத்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - பொதுஜன பெரமுனவின் ஒன்றிணைந்த ஊடக சந்திப்பு மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் மேற்கொள்ளும் ஒப்பந்தங்கள் தொடர்பில் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அனைத்து மக்களுக்கும் இவ்வாறு தெரிவிப்பது கடினம் என்பதால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப் பினர்களுக்காவது இது தொடர்பில் அறியப்படுத்த வேண்டும்.

இதனால் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பாக இரு நாட்கள் விவாதங்களை நடத்துவதற்கும் வாக்கெடுப்பை நடத்தி உறுப்பினர்களின் விருப்பு வெறுப்புக்களைக் கண்டறிவதற்கும் சபாநாயகர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். (இ-7)

# யாழ்.மாநகரசபையில் அனுமதிகோரி விண்ணப்பித்தால் நிறுத்த முடியாது

## உறுப்பினரின் கேள்விக்கு செயலாளர் பதில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் அனுமதி கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்களின் ஏற்பாடுகளை நிறுத்த முடியாது என யாழ்.மாநகர சபையின் செயலாளர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம் பெற்றது.

இதில் உறுப்பினர் ஒருவரால் நிதி நிறுவனத்தின் முறையற்ற செயற்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து எழுதப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பிழை சரிக்கு அப்பால் யாழ்.மாநகரசபையில் அனுமதி கோரி விண்ணப்பித்த நிறுவனம் ஒன்றின் நடவடிக்கையை இடைநிறுத்துவதில்லை என்ற விடயம் நடைமுறையாக உள்ளது.

சட்டவிரோத கட்டடம் கட்டுப்பட்டால் முதலில் அதை உடைக்கமாட்டோம். அவரிடம் உள்ள சகல ஆவணங்களையும் பரிசீலித்து பின்னர் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே சபை உறுப்பினர்கள் கோருவது போல் விண்ணப்பித்த ஒருவரின் நடவடிக்கையை நிறுத்துவது பற்றித் தனக்கும் தெரியவில்லை என செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# மிலேனியம் ஒப்பந்தத்தை எதிர்த்து தேரர் உண்ணாவிரதப் போராட்டம்!

(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் நிறுவனத்துடன் இலங்கை அரசு செய்துகொள்ளப்படவுள்ள ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உடுதும்பர காஷ்யப்ப தேரர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்தார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்திலேயே அவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின். 480 மில்லியன் டொலர் கொடைக்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் இந்த ஒப்பந்தத்திற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மிலேனியம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் நாடு தழுவிய ரீதியில் போராட்டம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

மிலேனியம் சாவல்கள் ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திட்டால் ஏனைய தரப்பினரையும் இணைத்துக் கௌண்டு நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்பேஏம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே மேற்கண்டவாறு எச்சரித்தார்.

உத்தேச ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்றத்துக்குத் தெளிவு படுத்தப்படவில்லை. பாராளுமன்றத்திற்கு தெரியாமல் அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பதானது மக்கள் விரோதச் செயலாகும்.

இந்த ஒப்பந்தத்தின்படி நாட்டிலுள்ள பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படலாம் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)



# மாற்றுத்திறனாளிகளுடன் நாமல் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்புடன் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் யாழில் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சரவணை கிழக்கு பள்ளம் புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணிமண்டபத்தில் நிலையத் தலைவர் சொ.சிவயோகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

# பூராடம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி-தனுசு ஆகும். தனுசு இராசியின் அதிபதி-குரு ஆவார். அதன் சின்னம்- வில் ஆகும். பூராடம் நட்சத்திரத்தின் அதிபதி - சுக்கி ரன் ஆவார். அதன் சின்னம்-ஆண் குரங்கு ஆகும். எனவே பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நல்ல புத்தி சாலியாகவும் நேர்மையாகவும் ஓரளவு சாந்த குணமுடையவர்களாகவும் இருப்பர். நீதி, நேர்மை தவறாது நடப்பர். ரொம்ப அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருப்பர். யாருக்கும் இவர்கள் அடங்கிப் போக மாட்டார்கள். பணம் சம்பாதிப்பதில் கெட்டிக்காரர்களாகத் திகழ்வர். சொகுசாக, ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற ஆசையும் இவர்களிடம் உண்டு. வீடு, நிலம், வாகனம், பங்களா முதலியன வாங்கிச் சிறப்பாக வாழ வேண்டும் என ஆசைப்பட நேரிடும்.

தங்களது ஆசை நிறைவேறும் வரை இவர்கள் கடுமையாகப் போராடுவர். கொஞ்சம் இவர்களிடம் குரங்குச்சேட்டையும் முன்கோபமும் உண்டு. தனது தாய் மீது அதிக பாசமாக இருப்பார்கள். தந்தை பாசம் சுமாராக இருக்கும். கல்வியில் நல்ல குணம் உண்டு. உயர் பட்டம் பெறும் அதிர்ஷ்டம் உண்டு. ஓரளவு தர்ம சிந்தனையும் தெய்வ பக்தியும் உண்டு. இவர்களது இல் வாழ்க்கை ஊடல், கூடல் நிறைந்ததாக இருக் கும். புத்திர பாசமுடையவர்கள். சகோதர பாசம் சுமாராக இருக்கும்.

சிலர் பதிப்பகம், நூலகம், பேப்பர், கமிஷன், தரகு சம்பந்தமான தொழில் செய்ய நேரிடும். சிலர் கம்பியூட்டர், கணக்கியல் சம்பந்தமான துறையில் பணிபுரிய நேரலாம். சிலர் ஆசிரியராகப் பணியாற்ற நேரிடும். பெரும்பாலும் மாதவிலக்குக் கோளாறு, அடிவயிற்றுக் கோளாறு, தலைவலி, காய்ச்சல் முதலியவற்றில் சில தொல்லைகளை அனுபவிக்க நேரலாம்.

பெண்கள் விடயத்தில் இவர்கள் ரொம்ப நேர்மையாகவும் ஒழுக்காகவும் நடந்து கொள்வர் எனலாம். சிலர் பொதுநலத் துறையில் ஈடுபட்டு மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்ய நேரிடும்.

# வடக்கு - கிழக்கில் ஐம்பதாயிரம் மாற்றுத்திறனாளிகளை உருவாக்கியே யுத்தத்தை முடித்து வைத்தார் மகிந்த

## விஜயகலா சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

யுத்தத்தை முடித்து வைத்ததாகக் கூறும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வடக்கு-கிழக்கில் ஐம்பதாயிரம் மாற்றுத்திறனாளிகளை உருவாக்கியிருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகவிருந்த மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு எதனைச் செய்தார்? யுத்தத்தை முடித்ததாகக் கூறி முள்ளிவாய்க்காலில் விதைத்த வரலாறு தான் அதிகம்.

யுத்தத்தின் பின் 90 ஆயிரம் குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக வாழ்கின்றன. அவர்களின் வயது 30-35 மாத்திரமே. வடக்கு-கிழக்கில் 50 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளை உருவாக்கிய அந்தத் தரப்பினர் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற பணத்தைக் கூட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கவில்லை.



ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மூவாயிரம் ரூபாய் கொடுப்பனவை ஐயாயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கி வருகிறது.

அதனைவிட கடந்த கால அரசாங்கம் வடக்கு-கிழக்கில் 12 ஆயிரம் சிறார்களை அநாதைகளாக்கி உறவினர், நண்பர்கள் வீட்டில் தங்க வைத்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக யுத்தத்தால் ஆறாயிரம் முதியவர்கள் பிள்ளைகளை இழந்து முதியோர் இல்லங்களில் வசித்து வருகின்றனர். இவற்றை எல்லாம் பார்க்கும் போது கடந்த கால அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதனைச் செய்துள்ளது? இவ்வாறான அட்டூழியத்தைப் புரிந்து தான் வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இவற்றை எல்லாம் புரிந்தவர்கள் இன்று மாற்றுக் கட்சியில் எமக்குப் போட்டியாகக் களமிறங்கியுள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வடக்கில் 14 சதவீதம் வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஆனால் இன்று களமிறங்கியிருக்கும் கோத்தபாய ராஜபக்ஷ 1.7 சதவீதம் வாக்குகளைக் கூட பெறக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30-114)

## ரவிராஜ் நினைவுப் பேருரை



(கொடிகாமம்)

அமரர் நடராஜா ரவிராஜ் நினைவுப் பேருரை எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான கே.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே. இம்மானுவல் "போரின் முடிவும் போராட்டத் தொர்ச்சியும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிறப்புரையையும் நிகழ்த்துவர். (இ-5-114)

## இராசி பலன்

**மீனம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் அன்புத்தொல்லைக்கு ஆட்பட நேரிடலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விரயங்கள் கூடும் நாள்.

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் அதிகரித்து வளம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** இழிபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விகிபாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்:** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயில்யம் | | |
| | | | |
| சனி, குரு, கேது | சுக் | சூரி, புத | செவ் |

06.11.2019

ஐப்பசி 20, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

நவமி முற்பகல் 9.38 மணிவரை

அவிட்டம் முற்பகல் 8.55 மணிவரை

சுபநேரம் 4.35-6.05 மணிவரை

இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

வளவன்

**கடகம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர் பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

## மணமகன் தேவை

லண்டன் PR உள்ள படித்த தொழில் புரியும் செவ்வாய், சூரியன் உள்ள விவாகரத்துப்பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.

(லண்டன் விரும்பத்தக்கது.)

தொடர்புக்கு: 076 351 2734

(869)


# இழப்பீட்டை பெற்றவர்கள் இடம்கொடுக்கவில்லை

(கரணவாய்)

வீதி அகலிப்பு வேலைகள் நடைபெற்று வரும் நிலையில் இழப்பீட்டைப் பெற்றுக் கொண்ட சிலர் இதுவரை மதில்களை அகற்றி வீதிப் புனரமைப்புக்கு இடம் கொடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. புலோலி - கொடிகாமம் வீதி நீண்டகாலத்தின் பின் உலக வங்கியின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. இவ்வீதி புனரமைப்பின் போது வீதி அகலிப்புப்பணி இடம்பெற்று வரும் நிலையில் தனியார் காணிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இழப்பீட்டைப் பெற்றுக் கொண்ட சிலர் இதுவரை மதில்களை அகற்றி இடம் கொடுக்கவில்லை. இழப்பீட்டை பெற்றும் மதில்களை அகற்றி இடம் கொடுக்காமை குறித்து அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (இ-5-60)

## வர்ண இரவு விருது 2019

### விளையாட்டுத்திணைக்களம், வடமாகாணம்

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள வர்ண இரவு விருது வழங்கல் நிகழ்வுக்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராகவும் அவர் பங்குபற்றிய விளையாட்டு நடப்பாண்டில் நடைபெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

வர்ண இரவு விருது வழங்கலுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் யாப்பு என்பவற்றினை மாகாணக் கல்வித் திணைக்களத்திலோ அல்லது மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரிடமோ அல்லது www.edumin.np.gov.lk எனும் இணையத்தள முகவரியூடாக பதிவிறக்கம் செய்வதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம், 25, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முழுமையாக பூர்த்தி செய்யப்படாத, புகைப்படம் இணைக்கப்பட்டிராத, வங்கிப்புத்தக முன்பக்கப்பிரதி இணைக்கப்படாத மற்றும் உரிய காலப்பகுதிக்குள் அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் விபரங்களை 02.12.2019 ஆம் திகதி தொடக்கம் www.edumin.np.gov.lk எனும் இணைய முகவரியில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 21.11.2019

பணிப்பாளர்,
விளையாட்டுத்திணைக்களம்,
வடமாகாணம்.

(C-8131)

## அரச சார்பற்ற நிறுவன வேலைவாய்ப்பு

பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விபரங்களை பின்வரும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

project co-ordinator-1
http://topjobs.lk/employer/advertismentpreview.jsp?jc=0000703560&ac=DEFZZZ&ec=DEFZZZ

Finance officer-1
http://topjobs.lk/employer/advertismentpreview.jsp?jc=0000703556&ac=DEFZZZ&ec=DEFZZZ

Field officer-5
http://topjobs.lk/employer/advertismentpreview.jsp?jc=0000703555&ac=DEFZZZ&ec=DEFZZZ

தலைவர்
ITHAM-CACPD

(C-8139)


## மணிவிழா வாழ்த்து

திருமதி. உமாராணி பேரானந்தம்
(BFA,SLTS-I)

best wishes



கடமையாற்றிய பாடசாலைகள்

- 26.03.1990-22.03.1999 வரை யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை
- 23.03.1999-02.05.2010 வரை யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
- 03.05.2010-31.08.2014 வரை யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி
- 01.09.2014-31.08.2016 வரை யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
- 01.09.2016-24.01.2019 வரை யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி.

எமது பாடசாலையில் அரும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர் திருமதி உமாராணி பேரானந்தம் அவர்களின் சேவையை இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(861)

பாடசாலைச் சமூகம்
யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பளை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை - 2018 இல் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள்.

பரிசில் நாள் நிகழ்வு: 06.11.2019



கேசவரூபன் மதுமிலன்
9A



கிருஷ்ணபாலு நிலானி
5AB3C



உருத்திரசிங்கம் சாளினி
5AB2CS

மேலும் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா.பவித்திரன் | - 4A2B2CS, | து.சுகிர்தா | - 4A2BCS, | இ.திலைக்ஷிகன் | - 3A2B3CS, |
| வி.யாணுஷா | - 3A3BCS, | கோ.யகீசன் | - 2A4BC2S, | ச.தேனுஜா | - 2A2B3C2S, |
| பி.மதுசா | - 2A3BC2S, | ச.சர்வேஜினி | - A2B2C3S, | வி.விஜிபா | - A2B2C2S, |
| இ.பவித்திரா | - B5C2S, | யோ.யதீனா | - 4C3S, | சி.றஜிந்தா | - 2C4S, |
| ம.கனிஸ்ரா | - 2A2BCS, | சு.இதயசங்கர் | - A5CS, | ச.சாஜகான் | - 3C4S, |
| ச.சோபிதன் | - 3C2S. | | | | |

(C-8136)

வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்



வவுனியா சிதம்பரபுரம் ஈழத்து பழனி முருகன் ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவத்தின் ஆறாவது நாளான கடந்த சனிக்கிழமை முருகப்பெருமான் சூரபத்மனை வதம் செய்யும் சூரசம்ஹாரம் சிறப்பான முறையில் இடம்பெற்றது.மேற்படி சூரசம்ஹார நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# வவு.மின்சாரசபை ஊழியர்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை ஆச்சிபுரம் பகுதிக்கு தொழில் நிமிர்த்தம் சென்ற மின்சார சபை ஊழியர்கள் மீது அங்கிருந்த ஒரு குழுவினரால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் அத்தாக்குதலில் ஆறு மின்சார சபை ஊழியர்கள் படுகாயடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

எனினும் நேற்றுக்காலை வரை இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இத்தாக்குதலுக்கு தலைமை வகித்தவர் உட்பட இன்னும் பலர் கைது செய்யப்படவில்லை. இதையடுத்து வவுனியா மின்சார சபை ஊழியர்கள் நேற்றுக்காலை முதல் பொலிஸாரின் அசமந்தப் போக்கைக் கண்டித்து பணிப்புறக்கணிப்பினை மேற்கொண்டனர்.

தமது ஊழியர்களைத் தாக்கிய சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ள நபர் உடனடியாக கைது செய்யப்படவேண்டும். அதுவரையில் தமது போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் எமது கடமையை சுதந்திரமாக மேற்கொள் வதற்கு பாதுகாப்பு வேண்டும். அதுவரை அவசர தேவைகள் உட்பட அனைத்துப் பணிகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து வவுனியா பூங்கா வீதியிலுள்ள மின்சார சபை தலைமை அலுவலகத்தில் ஒன்று கூடிய மின்சார சபை ஊழியர்கள் அங்கிருந்து ஊர்வலமாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தை சென்றடைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பொலிஸார் மின்சாரசபை ஊழியர்கள் நான்குபேரை அழைத்து பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடியதுடன் 24 மணி நேரத்தில் கைது செய்வதாக பொலிஸார் வழங்கிய வாக்குறுதியை அடுத்து ஊழியர்கள் அங்கிருந்து சென்றபோதிலும் தமது பணிப் புறக்கணிப்பை தொடர்ந்து மேற்கொண்டிருந்தனர். (9-250-299)

# முன்பள்ளி திறப்பு

(மன்னார்)

மன்னார்- மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாலியாறு கிராமத்தில் அமைக்கப்பட்ட முன்பள்ளி நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து நாட்டின் ரொக்ட்ஸ் (rockids) அறக்கட்டளை அமைப்பின் நிதி உதவியுடன் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் அமுலாக்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட குறித்த முன்பள்ளியே திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இந்த முன்பள்ளியை வாழ்வுதய இய்க்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார், நெதர்லாந்து நாட்டின் ரொக்ட்ஸ் அறக்கட்டளை அமைப்பின் பிரதிநிதிகள் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து முன்பள்ளி சிறுவர்களினால் நிகழ்வுகள் இடம்பெற்றதோடு சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பங்குத்தந்தை, பொலிஸ் அதிகாரி, கிராம அலுவலகர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9)

# கிளிநொச்சியில் அதிக பனிமூட்டம் மக்கள் பெரும் அசௌகரியம்



(முறிகண்டி)

கிளிநொச்சியில் நேற்றுக் காலை வழமைக்கு மாறான பனிமூட்டம் காணப்பட்டமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டனர். இதனால் வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள், எனப் பலரும் அசௌகரியங்களை எதிர் கொண்டதுடன் வீதிப்போக்குவரத்திலும் அதிக சிரமங்களை பொதுமக்கள் எதிர்கொண்டிருந்தனர். (9-100)

# தருமபுரத்தில் அதிநவீன வசதிகளுடன் ஆயுள்வேத வைத்தியசாலை

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட தருமபுரம் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய ஆயுள்வேத வைத்தியசாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபைக்குட்பட்ட நாதன்திட்டம் புன்னைநீராவி, பிரமந்தனாறு, கல்லாறு, தருமபுரம், கட்டைக்காடு ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்களுக்கான இலவச ஆயுள்வேத வைத்திய சேவையை வழங்கும் வகையில் ஆயுள்வேத வைத்தியசாலையினை அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வைத்தியசாலை அமைப்பதற்கான காணியினை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் த.குருகுலராஜா வழங்கிய நிலையில் மேற்படி வைத்தியசாலை அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களான ஜீவராசா, கலைவாணி,



தவபாலன் ஆகியோர் அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ள இவ் வைத்தியசாலை முதற்கட்ட பணிகள் சபையின் சொந்த நிதியில் சுமார் 2.5 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் மரநடுகை செயற்றிட்டம் ஆரம்பம்



(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் மர நடுகை வாரத்தை முன்னிட்டு பொது இடங்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் மர நடுகை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் தேசிய மற்றும் மாகாண செயற்றிட்டங்களையும் சபையினுடைய தீர்மானத்தையும் நிறைவேற்றும் பொருட்டு குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது வழக்கமாக இடம் பெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் பிரதேச சபையின் செயலாளர் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர். (9-315)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
# வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2020

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2020 ஆம் ஆண்டிற்கு கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்யவிரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாதிரி படிவத்திற்கு அமைய தாமாக தயாரித்தோ அல்லது மாவட்டச் செயலக நிதிக்கிளை மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் அலுவலக நேரத்திலும் www.kilinochchi.dist.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கு ஏற்றவாறும்,

| ஒப்பந்தத் தொகை | பதிவுக்கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2000.00 |
| ரூபா 2,000,000 இற்கு அதிகமானதும் 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3000.00 |
| ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 5000.00 |

ஏனைய வழங்குநர்கள் ஒவ்வொரு வகை வழங்குநர் பதிவிற்கும் தனித்தனியாக ரூபா 250/= இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்னும் பெயரில் உள்ள இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7041986 இற்கு பணமாக வைப்பிலிடலாம். அல்லது நேரடியாக மாவட்ட செயலக நிதிக்கிளையில் சிறாப்பரிடம் செலுத்தலாம். வைப்பிலிட்ட பணத்திற்கான வங்கிவைப்புசிட்டை அல்லது சிறாப்பரிடம் பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| குறியீட்டு இலக்கம் | வேலைகள் |
|---|---|
| W -1 | கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள். |
| W -2 | பெருந்தெருக்கள், பாலங்கள், மதகுகளின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள். |
| W -3 | குளங்கள், கால்வாய்கள் மற்றும் விவசாய கிணறுகளின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள். |
| W -4 | அனைத்து வகையான வெல்டிங் வேலைகள் மற்றும் அலுமினிய வேலைகள். |
| W -5 | கட்டிட, மின்சார கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்த வேலைகள். |
| W -6 | நீர்க்குழாய் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்த வேலைகள். |

### நியந்தனைகள்

• மேற்படி W - 01 - 03 வரையான விடயங்களுக்கு (ICTAD/CIDA) பதிவு கட்டாயமாகும் என்பதுடன் அதற்குரித்தான பதிவுச் சான்றிதழ்களின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

| குறியீட்டு இலக்கம் | பொருட்கள் |
|---|---|
| G-1 | அலுவலகத்தளபாடங்கள் - மரம், இரும்புருக்கு, பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ், எம்.டீ.எப் |
| G-2 | காகிதாதிகள், எழுதுபொருட்கள் |
| G-3 | சுத்திகரிப்புப் பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, சவர்க்காரங்கள், காப்பிக், பைனோல், Handwash, Airfreshner, துடைப்பான் மற்றும் ஏனையவை) |
| G-4 | போட்டோப்பிரதி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், மல்டிமீடியா புரெஜெக்டர் |
| G-5 | கணனி இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் அதனோடு இணைந்த துணைச்சாதனங்கள். |
| G-6 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள். |
| G-7 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| G-8 | உணவுவகைகள், குடிநீர் வகைகள், பால்மாவகைகள், மென்பானம் |
| G-9 | பொது உபகரணங்களும் வீட்டுப்பாவனைப் பொருட்களும். |
| G-10 | திரைச்சீலைகள், சீருடைகள், மேசைவிரிப்புக்கள், நிலவிரிப்புக்கள், பொன்னாடைகள், மேசைக்கண்ணாடிகள், மழைஅங்கிகள், கால்மிதிகள், பெற்சீற், தலையணை உறைகள். |
| G-11 | அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள், நீர்க் குழாய்கள் மற்றும் நீர்வழங்கல் உபகரணங்கள், காற்றுச் சீராக்கிகள், நிறப்பூச்சுக்கள் |
| G-12 | தோல் வகை உற்பத்திப்பொருட்கள் |
| G-13 | விளையாட்டுப் பொருட்களும் உபகரணங்களும் |
| G-14 | இசைக்கருவிகள் |
| G-15 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-16 | மீன்பிடி தொடர்பான பொருட்கள் |
| G-17 | சுய தொழிலுக்காக வளர்க்கப்படும் விலங்குகள் (கோழிக் குஞ்சுகள், பாற் பசுக்கள்,ஆடுகள்) |
| G-18 | இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள் (மின்விசிறி, தொலைக்காட்சிப்பெட்டி, டிஜிரல் புகைப்படக் கருவி, வீடியோபதிவுக் கருவி, CCTV புகைப்படக் கருவி போன்றன) |

| குறியீட்டு இலக்கம் | சேவைகள் |
|---|---|
| S-1 | போட்டோப்பிரதி இயந்திரங்கள், கணனி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள் மற்றும் கணனி வலையமைப்பு முறைமை திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல். |
| S-2 | அலுவலகத் தளபாடங்கள் திருத்தம் செய்தல் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைபர்கிளாஸ், எம்.டீ.எப்) கதிரை இழைத்தல் |
| S-3 | குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் (A/C) திருத்தலும் பராமரித்தலும். சேவிஸ் செய்தலும் |
| S-4 | மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | மின் வயர்கள் பழுது பார்த்தலும் பராமரித்தலும் |
| S-6 | இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள், புல்லுவெட்டி இயந்திரங்கள் திருத்தலும் பராமரித்தலும். |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல் |
| S-8 | பாதுகாப்பு சேவை வழங்கல் |
| S-9 | வாகனம் பழுது பார்த்தல் :- உள்வாரியான திருத்தங்கள் இயந்திரம் மற்றும் வாகனப் பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள். |
| S-10 | வாகனம் பழுது பார்த்தல் :- வெளிவாரியான திருத்தங்கள் தகடுகள்(Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும் |
| S-11 | வாகனம் பராமரித்தல்:- கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (Alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் சீற் மற்றும் குசன் கவரிடுதல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும் |
| S-12 | மேடை மற்றும் ஒலிபெருக்கி சேவைகள் |
| S-13 | அச்சிடுதல் (offset, digital உட்பட), புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் தயாரித்தல், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள் செய்தல், |
| S-14 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் |
| S-15 | சலவை செய்தல் |
| S-16 | தையல் சேவை |
| S-17 | உள்ளகதொலைபேசி திருத்தலும் பராமரித்தலும். |

### பொதுவான நியந்தனைகள்:

வழங்குநர்களைப் பதிவு செய்தலுக்குரிய பொதுவான நிபந்தனைகள்.

1) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   a) வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் சான்றிதழ்).
   b) நிறுவனப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
   c) உணவு வழங்கல் சேவையாயின் குறித்த பகுதிக்குரிய PHI/MOH அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழின் பிரதி.
   d) சம்பந்தப்பட்ட வியாபார அனுபவம் மற்றும் பிரதான வாடிக்கையாளர்களின் விபரம்.
2) வழங்குநர்களாக பதிவு செய்தலானது 2020 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும். பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுகோரப்படும். எனினும் ஏனையவர்களிடமும் விலைமனுகோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.
3) விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4) பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல்
   ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை மாவட்ட செயலாளர் கொண்டுள்ளார்.
5) மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6) வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7) குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகளுக்கு வழங்குநர்களாகப் பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள், ஆவணங்களின் உண்மைத்தன்மையானது மாவட்டச் செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாகச் சென்று பார்வையிடுவதன் மூலமோ, நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குநர் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகளுக்கு வழங்குநர்களாகப் பதிவு செய்வதற்குத் தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8) வாகன பழுது பார்த்தலுக்கோ வாகனப் பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).
   தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினைப் பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
9) வழங்குநர்களுக்குப் பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
10) பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு மீளளிக்கப்படாத வைப்புப்பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2019 டிசெம்பர் மாதம் 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "அரசாங்க அதிபர், நிதிக்கிளை, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் (மு.ப.9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-2020" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

11) 2019 டிசெம்பர் மாதம் 06 ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
12) மேலதிக விபரங்களிற்கு "பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி" அவர்களுடன் செயலக தொலைபேசி இல 021 228 5309, 021 228 5352 மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

**திரு.சுந்தரம் அருமைநாயகம்**
**மாவட்டசெயலாளர்,**
**மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.**

(C-8133)

அலுவலக உபயோகத்திற்கு

மாதிரிவிண்ணப்பப் படிவம்
2020ம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் - பதிவுசெய்தல்
மாவட்டசெயலகம் - கிளிநொச்சி.

1. வியாபார நிறுவனத்தின் பெயர் : ..................
2. வியாபார நிறுவனத்தின் முகவரி : ..................
3. உரிமையாளரின் பெயர் : ..................
4. தே. அ. அ இலக்கம் : ..................
5. வியாபார பதிவிலக்கமும் திகதியும் : ..................
   (பதிவுப்பிரதியின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டியது அவசியமானது)
6. I. தொலைபேசி இல ..................
   II. தொலைநகல் இல ..................
   III. கையடக்க தொலைபேசி இல ..................
7. பதிவுசெய்வதற்கு விண்ணப்பிக்கும் விடய குறியீட்டு இலக்கம் ..................
   (2020ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல் அறிவுறுத்தல் விடய இல W 1-6, G 1-18, S 1-17 வரை பார்வையிடவும்)
8. வியாபாரத்தின் தன்மை : ..................
   (உற்பத்தியாளர்/பிரதானவர்த்தகர்/விற்பனைமுகவர் அவைதொடர்பான விபரங்கள் ஆவணங்களுடன்)
9. வங்கியாளர்களின் பெயர்கள் ..................
10. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி ..................
11. மின்னஞ்சல் முகவரி ..................
12. வருமானவரி செலுத்துபவராக இருப்பின் அதன் விபரங்கள்
    ..................
13. பெற்றுள்ளதரச் சான்றிதழ்கள் (ISO) என்பன : ..................
14. VAT, NBT இலக்கம் இருப்பின் அதன் விபரங்கள் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
    ..................
15. ICTAD இலக்கம் இருப்பின் அதன் விபரமும், அதில் என்னவகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்ற விபரமும் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
    ..................

• என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும், அரசாங்க அதிபர் அவர்களால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறோம். பதிவுக்கட்டணம் ரூபா .......... வினை 2019.......... ந் திகதி மாவட்டச் செயலகத்தின் நிதிக் கிளையிலுள்ள சிறாப்பரிடம் பணத்தை செலுத்திய / மாவட்ட செயலக இலங்கை வங்கியின் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்துள்ளேன்.

| | | |
|---|---|---|
| ..................<br>விண்ணப்பதாரியின் ஒப்பம்<br>(உத்தியோகபூர்வ முத்திரை) | ..................<br>பெயர் | ..................<br>திகதி |

# வடக்கில் அதிகரித்துவரும் டெங்குத் தாக்கத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்க

## அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் பணிப்புரைக்கு அமைவாக வடமாகாணத்தில் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக ஆளுநரின் செயலாளர் தலைமையிலான விசேட கலந்துரையாடல் நேற்று ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் வடமாகாண சுகாதார சுதேச வைத்திய நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் பதில் செயலாளர் கே.தெய்வேந்திரம் , வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் , மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பணிப்பாளர்கள், வடமாகாண சிரேஷ்ட பொதுச் சுகாதார அதிகாரி, யாழ்.மாவட்ட பொதுச்சுகாதார ஆய்வாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் டெங்குத் தாக்கமானது செப்டெம்பர் மாதம் வரை கட்டுப்பாட்டில் இருந்துடன் ஒக்டோபர் மாதம் சடுதியான அதிகரிப்பை எட்டியுள்ளது. கடந்த செப்டெம்பர் முதல் டெங்கின் தாக்கம் ஆரம்பித்ததாகவும், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் டெங்கின் தாக்கம் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் வடமாகாணத்தில் டெங்கின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளதுடன் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலே அதிகளவில் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். யாழ்.மாவட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் 154 பேரும் ஒக்டோபர் மாதம் 538 பேரும் யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் கோப்பாய் பகுதிகளில் டெங்கின் தாக்கம் அதிகமாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வடமாகணத்தில் டெங்குத் தாக்கத்தால் 2017 ஆம் ஆண்டு 7 பேர் உயிரிழந்ததுடன் 2018ஆம் ஆண்டு 4 ஆக குறைவடைந்தது. 2019 டெங்கு தாக்கத்தினாலான இறப்பு பூச்சியமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வவுனியா சூசையப்பர் குள பிரதேசம் மற்றும் மூன்றுமுறிப்பு பகுதிகளில் டெங்குத் தாக்கம் அதிகளவில் பரவும் இடமாகக் காணப்படுவதாகவும் மரக்காலைகள் மற்றும் கடைகளில் அதிகளவில் டெங்கு பரவுவதற்கான சூழ்நிலைகள் காணப்படுவதாகவும் வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்போது டெங்குப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கூட்டம் ஒவ்வொரு வாரமும் பிரதேச செயலக ரீதியாகவும் ஒவ்வொரு மாதமும் மாவட்ட செயலக ரீதியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழான மன்றங்கள் மற்றும் சபைகள் அவர்களுடன் இணைந்து டெங்குத் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆளுநரின் செயலாளர் கேட்டுக் கொண்டார்.

டெங்கு நோய்க்கு காரணமான நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் அவதானமாகவும் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் ஆளுநர் பொதுமக்களை கேட்டுக் கொண்டார். (இ-5)

## இரணைமடு குளம் திறப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி இரணைமடுக்குளம் காலபோக பயிர்ச் செய்கைக்காக நேற்று முன்தினம் நீர் திறந்து விடப்பட்டுள்ளது. குளத்தின் வலதுகரை, இடதுகரை துருசுகள் இரண்டும் நீர் விநியோகத்திற்காக திறக்கப்பட்டன.

கடந்த மாவட்ட விவசாயக் குழுத் தீர்மானத்திற்கமைவாகவும் மழையின்மையினால் களை நாசினி பாவிக்கப்பட்ட வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண் டிய நிலையிலும் நேற்று முன்தினம் குளத்தின் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் பெரிய நீர்ப்பாசன குளங்களின் நீர்மட்டம் பத்தடியினை தாண்டும் நிலையில் குளத்தின் நீர் திறந்து விடப்படும் என எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இரணைமடுக் குளத்தின் நீர் காலபோக பயிர்ச் செய்கைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் அதிகாரிகள், இரணைமடுக் கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (9-350)

# நாட்டின் ஒற்றுமையை குலைக்கும் பேரினவாதிகளுக்கு தேர்தல் முடிவுகள் பதில் சொல்லும்-அமைச்சர் றிஷாட்

(நெளுக்குளம்)

இனவாதம் பேசி ,சிறுபான்மையினரை அடிமைப்படுத்தி நாட்டின் ஒற்றுமை, நிம்மதியை குலைக்க நினைக்கும் பேரினவாதிகள் தோல்வியடைந்து விட்டார்கள் என்று தேர்தல் முடிவுகள் சொல்லும் என அமைச்சர் றிஷாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.



வவுனியா மதீனா நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாஸ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவருக்கும் இடையில்தான் போட்டியுள்ளது. சஜித் பிரேமதாஸவை வெல்ல வைப்பதற்காக நான் மட்டும் அல்ல பல சிறுபான்மை இன கட்சிகளை சேர்ந்த தலைமைகள் நாடு முழுவதும் சென்று பிரசாரம் செய்கின்றனர். ரத்ன தேரர், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, எஸ்.பி. திஸாநாயக்க, மகிந்தானந்த அளுத்கமகே போன்ற இனவாதிகள் கோத்தபாயவை வெல்ல வைப்பதற்காக ஓடித்திரிகிறார்கள்.

தம்புள்ளையில் தொடங்கி திகன வரை பள்ளிவாசல்களை உடைத்த வரலாறு உள்ளது. இவற்றை யார் செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியும். எனவே நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகம் கோத்தாவா? சஜித்தா? என சிந்திக்க வேண்டும். இங்கு சில ஏஜென்டுக்கள் பணத்தை கொண்டுவந்து எங்கள் மக்களின் ஒற்றுமையை குலைப்பதற்காக சதி செய்கின்றார்கள். அவர்கள் ஒரு மாதிரியான மாயையை காட்டுகிறார்கள். இதற்கு சிறுபான்மையினரின் வறுமை, இயலாமையை பயன்படுத்துகிறார்கள்.

நாங்கள் இந்த நாட்டிற்கு தீங்கிழைக்கவில்லை. இந்த நாட்டில் பல நூறு வருடங்களாக எமது சமூகம் வாழ்ந்திருக்கிறது. பயங்கரவாத ஆயுத கலாசாரத்திற்கு ஒருபோதும் செல்லாதவர்கள் நாங்கள்.

நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவத்திற்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் எதிர்த்து எம் மக்களை நிம்மதியாக அப்பிரதேசங்களில் வாழ முடியாத அச்ச நிலையை உருவாக்கியவர்கள் இன்று முஸ்லிம் கிராமங்களுக்கு வந்து வெட்கம் இல்லாமல் வாக்கு கேட்கிறார்கள்.

இன, மத ,வாதம் பேசி சிறுபான்மையினரை அடிமைப்படுத்தி அவர்கள் சார்ந்த தலைவர்கள் மீது அபாண்டத்தை சுமத்தி, நாட்டின் ஒற்றுமை, நிம்மதியை குலைக்க நினைக்கும் பேரினவாதிகள் தோல்வியடைந்து விட்டார்கள் என்று தேர்தல் முடிவுகள் சொல்லும் என மேலும் தெரிவித்தார். (9-299)

## தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி சஜித்தை ஆதரிக்க முடிவு



(நெளுக்குளம்)

ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முண்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவுள்ளதாக தேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ஆனந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு வவுனியா தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என எமது கட்சியின் நிறைவேற்று குழு தீர்மானித்துள்ளது. மூவின மக்களாலும் விரும்பப்படுகின்ற ஒரு தலைமையே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற வகையில் எமது கட்சியானது சஜித் பிரமேதாஸவை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவினை எடுத்துள்ளது.

அவருடனான கலந்துரையாடலின் போது 25 பாரிய துறை சார்ந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அவரிடம் முன்மொழிந்திருந்தோம். அவர் உடனடியாக அந்த கோரிக்கைகளை பரிசீலனை செய்தார்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்கு தனக்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்லை எனச் சொன்னார். அதன் பின்னரே எமது முடிவினை தெரிவித்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (9-299)

# வவுனியாவிலுள்ள 42 கிராமங்களில் இரண்டு நாட்களாக மின்தடை


(நெளுக்குளம்)

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் நேற்று மாலை மின்சார சபை ஊழியர்கள் மீது அப்பகுதியிலுள்ள குழுவினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தில் ஆறு பேர் காயமடைந்திருந்தனர். இந்நிலையில் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 42கிராமங்களுக்கு நேற்று முன்தினம் முதல் மின்தடை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், ஆச்சிகுளம், கோவில்குளம், சிதம்பரபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவை உள்ளடக்கிய சுமார் 42 கிராமங்களுக்கு இதனால் மின்தடை நேற்று முன்தினம் முதல் ஏற்பட்டுள்ளது.

மின்சார சபையின் பணிகளை மேற்கொள்ளச் சென்றவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை மற்றும் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ள குழுவினர் நேற்றுக் காலைவரையும் கைது செய்யப்படாதமையைக் கண்டித்து மின்சார சபை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் 42 கிராமங்களில் ஏற்பட்டுள்ள மின்சாரத்தடை காரணமாக பாடசாலை மாணவர்கள் உட்பட பலதரப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (9-299)



வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் "மனித சமூகமும் பொருளாதார மேம்பாடும்" எனும் தொனிப் பொருளிலான சிந்தனையரங்கம் கடந்த ஞாயிற்றுக் கிழமை தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் வவுனியா ஆதிவிநாயகராலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.

# மாகாண சபை முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்தி எமது அரசியல் இலக்கு நோக்கி முன்னேறிச் செல்வோம்

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஈ.பி.டி.பி.16 அம்ச தீர்மானங்கள்

மாற்றத்தை விரும்பும் தமிழ் மக்களுக்காக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து நாம் எடுத்திருக்கும் உறுதிமிக்க தீர்மானங்கள்!..

மாற்றமொன்று இந்த நாட்டில் விரைவில் நிகழும் என்பதில் மாற்றமில்லை.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் இந்த மாற்றத்தில் பங்குதாரர்களாக இருக்கப்போகின்றோமா?,பார்வையாளர்களாக இருக்கப்போகின்றோமா? அல்லது வெறும் எதிர்பார்ப்பாளர்களாக இருக்கப் போகின்றோமா? இதை தமிழ் மக்களாகிய நாமே தீர்மானிக்க வேண்டும்.

நிகழப்போகின்ற அந்த மாற்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பு கணிசமான அளவு இருந்தாக வேண்டும். அதனூடாகவே அந்த மாற்றத்தின் விமோசனங்களை தமிழ் மக்களும் அனுபவிக்க முடியும்.

மாற்றத்தை உருவாக்குவோம் என்று தமிழ் மக்களிடம் கூறி இன்றைய அரசை உருவாக்க பங்களித்த சக தமிழ்க் கட்சிகளே இன்று அதே அரசு தங்களை ஏமாற்றி விட்டதாக புலம்பத் தொடங்கிவிட்டார்கள். அவர்களைப் போல் நாமும் எதிர்காலத்தில் எமது அரசு எம்மை ஏமாற்றி விட்டதாக ஒருபோதும் கூறப் போவதில்லை.

யாருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என்று நாம் கூறுகின்றோமோ அவர்களுக்கு வாக்களித்தால் அதற்கான பொறுப்பை நாமே ஏற்போம். எமது மக்களிடம் இன்று இருப்பது வாக்குப்பலம் ஒன்றே.

அதை வைத்து எமது மக்களின் சகல உரிமைகளையும் வென்றெடுத்தே தீருவோம். இந்த உறுதியான ஆத்மபலம் எம்மிடம் உண்டு. எமது அரசியல் அகராதியில் எமது சொந்தச் சலுகைகளைப் பெறுவதற்காக எக்காலத்திலும் எந்த அரசுடனும் நாம் உறவு வைத்திருந்தவர்கள் அல்ல.

நிகழப்போகின்ற ஆட்சி மாற்றத்தை வைத்து எமது மக்களின் வாக்குப்பலத்தால் அனைத்து உரிமைகளையும் பெற்றுத்தருவோம்.

யதார்த்தமான உறுதியான எமது அரசியல் வழிமுறைக்கு யதார்த்தமானதும், உறுதியானதுமான நாட்டின் தலைவர் ஒருவர் உருவாகும் போது அவரது வருகையை நாம் சரிவர கையாள வேண்டும்.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் விசேட மாநாடு நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்**

1. மாகாணசபை முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து தொடங்கி அதை மேலும் பலப்படுத்தி எமது அரசியல் இலக்கு நோக்கி முன்னேறிச் செல்வோம்.

2. இருமொழிக் கொள்கையை உரிய வகையில் நடைமுறைப்படுத்தக் கோருவோம்.

3. எஞ்சிய தமிழ் அரசியல் கைதிகளை விரைவாக விடுதலை செய்விப்போம்.

4. சகல முன்னாள் போராளிகளுக்கும் வாழ்வாதார வசதிகளையும் நிரந்தர தொழில் வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுப்போம்.

5. எமது நிலம் எமது மக்களுக்கே சொந்தம். இந்த உறுதிமிக்க கொள்கை வழி நின்று எஞ்சிய எமது மக்களின் நிலங்களையும் மீட்டுக்கொடுப்போம்.

6. காணாமற்போன உறவுகளைத்தேடும் மக்களின் கண்ணீருக்கு பரிகாரம் பெற்றுக் கொடுப்போம்.

7. எமது தேசத்தை தூக்கி நிறுத்தும் அபிவிருத்திப் பணிகளை நாம் விட்ட குறையிலிருந்து மறுபடி தொடருவோம்.

8. முதற் கட்டமாக வேலையற்ற தமிழ் இளைஞர்,யுவதிகளில் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்போம்.

யுத்தம் காரணமாக உரிய கல்வித்தகைமையை இழந்து நிற்கும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு தற்காலிக வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதோடு கால அவசியத்தின் அடிப்படையில் அதற்கான கல்வித் தகைமையை பெற்றிடவும், தொழில் அனுபவங்களின் அடிப்படையில் நிரந்தர வேலை வாய்ப்பையும் பெற்றிட நடவடிக்கை எடுப்போம்.

9. வீடற்ற மக்களுக்கு வீடு, நிலமற்ற மக்களுக்கு நிலம். மீள்குடியேறிய மக்களுக்கு நிரந்தர வாழ்வியல் உரிமையைப் பெற்றுக்கொடுப்போம்.

10. இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நடைபெறும் இன, மத ரீதியிலான சகல திணிப்பு நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டு வருவோம்.

11. பொலிஸ் சேவைகளிலும், முப்படைகளிலும் உள்ள பதவிகளுக்கு இன விகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்போம்.

12. நுண்கடன் காரணமாக பாரிய பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ள மக்களை அந்தப் பாதிப்புக்களில் இருந்து மீட்டு எடுப்பதற்கான உரிய பொறிமுறைகளை உருவாக்குவோம்.

13. யுத்தம் காரணமாக கணவன்மாரை இழந்த பெண் தலைமைத்துவக்குடும்பங்களுக்கு பொருளாதாரப் பலத்தையும், சமூகப் பாதுகாப்பையும் வழங்கக்கூடிய உரிய வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்கிக் கொடுப் போம். விசேட தேவையுள்ளவர்களுக்கு சமூகத்தில் சமனானவர்கள் என்பதை உறுதிப்படுத்த விசேட திட்டங்களை உருவாக்குவோம்.

14. கடற்றொழில், விவசாயம், பனந்தொழில் மற்றும் சகல தொழிற்றுறைகளையும் ஊக்குவித்து எமது மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை வினைத்திறனுடன் முன்னெடுப்போம்.

15. முள்ளிவாய்க்கால் வரை கொல்லப்பட்ட சகல மனித உயிர்களுக்கும் மரியாதை செலுத்தும் வகையிலும், மதவழிபாடுகளை மேற்கொள்ளும் வகையிலும் பொதுச் சதுக்கத்தையும் அதற்கான நினைவு நாளையும் உருவாக்குவோம்.

16. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாம் கொண்டிருந்த தேசிய நல்லிணக்க உறவையும் அதன் ஊடாக எமது மக்களுக்கு நாம் ஆற்றிய பணிகளின் போது அவர்களுடன் எமக்கு ஏற்பட்ட பரீட்சயத்தையும் அனுபவங்களையும் வைத்து எமது மக்களுக்கான பணிகளை விட்ட குறையிலிருந்து தொடருவோம் என்ற நம்பிக்கையில் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றியில் நாமும் பங்கெடுக்க தொடர்ந்தும் உழைப்போம் என்றும் அந்த வெற்றியை தமிழ் மக்களின் வெற்றியாக மாற்றியமைக்க எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சிந்தனை வழிநின்று உறுதியுடன் உழைப்போம் என்றும் நாம் தீர்மானம் எடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் எமது ஆற்றலாலும், அனுபவத்தாலும், ஆளுமையாலும் எமது தேசிய நல்லிணக்க உறவினாலும் பாரிய மக்கள் பணியை வெற்றியுடன் முன்னெடுத்த நாம் மேற்கூறிய எமது கட்சியின் தீர்மானங்களை விரைவாக நிறைவேற்ற உறுதி கொண்டு உழைப்போம்.

நாம் செல்லும்
பயணம் வெல்லும்!
உரிமைக்கு குரல் கொடுப்போம்!
உறவுக்கு கரம் கொடுப்போம்!!
மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி!! எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# சஜித் ஜனநாயகவாதி கோத்தா அராஜகவாதி

## திகாம்பரம் சாடல்

(கண்டி)

மலையக மக்கள் சோற்றுக்கும் மதுவுக்கும் சோரம் போனவர்கள் அல்லர் என தெரிவித்த அமைச்சர் பழனி திகாம்பரம் ஜனநாயகவாதி சஜித் எனவும், அராஜகவாதி கோத்தபாய ராஜபக்ஷ எனவும் விமர்சித்தார்.



ஹற்றன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் 3 ஆவது பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் மலையக மக்களுக்கு தேவைகளை செய்து விட்டு அவர்களிடம் வாக்குகளைப் கேட்கின்றோம். ஆனால் சிலர் மலையக மக்களை அடகுவைத்து அவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள வலம் வருகின்றனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் மக்களை வேண்டிக்கொள்கின்றது.

மலையகத்தில் மறுமலர்ச்சிமிக்க மேலும் ஒரு மாற்றம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஊடாக நடைமுறைக்கு வரும். அது சஜித் பிரேமதாஸவின் ஊடாக வரவிருக்கின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 7 பேர்ச் காணிகளுடன் தனி வீடுகளை அமைத்து அவர்களை மாற்றத்திற்கு கொண்டு வர நாம் போராடி வருகின்றோம். ஆனால் மலையக அரசியல்வாதிகள் சிலர் எமக்கு இடம் வேண்டாம், மாடி வீடுகளே போதும் என பிரசாரித்து வருகின்றனர்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களுக்கு சிறப்பான அபிவிருத்தித் திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களுக்கு மாடி வீடுகள் மற்றும் ஆயிரம் ரூபாய் தருவதாக தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் மலையக மக்களுடைய மறுமலர்ச்சிக்காக ஒரு மாற்றத்தை கொண்டு வரும் ஜனநாயகத் தலைவராக சஜித் பிரேமதாஸ விளங்குகின்றார்.

நாம் ஜனநாயகவாதியான சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களிக்க வேண்டும். அன்னம் சின்னம் மலையக மக்களுக்கு தெரியாது என சொல்லி வருகின்றனர். ஆனால் மலையக மக்களுக்கு அன்னம் சின்னமும் விளங்கும். அனைத்து சின்னங்களும் விளங்கும். ஆகையால் மலையக மக்களின் தேர்வாக அன்னம் சின்னம் வெற்றிப் பெறும் என்பதில் உறுதியாக இருப்பதாக மேலும் தெரிவித்தார். (ஐ)

# போதைப்பொருள் கடத்தல்; 35 ஆயிரத்து 702 பேர் கைது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இதுவரை 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதிக்குள் போதைப்பொருட்களை கடத்திய குற்றச்சாட்டில் 35 ஆயிரத்து 702 பேர் கைதுசெய்யப்பட்டதாகபொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆயிரத்து 638 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் இதுவரை கைப்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# உத்தரப்பிரதேசத்தில் பயங்கரவாதிகள் ஊடுருவல்- உளவுத்துறை எச்சரிக்கை

(டில்லி)

உத்தர பிரதேசத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த 7 பயங்கரவாதிகள் ஊடுருவியுள்ளதாக உளவுத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பயங்கரவாதிகள் அயோத்தியை அண்மித்த பகுதிகளில் பதுங்கி இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இதனையடுத்து மாநிலம் முழுவதும், பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் ஊடுருவ முயற்சிப்பதாகச் சந்தேகிப்பதால் அங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (2)




# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட எம்.வி.பொனிட்டா கப்பல் ஊழியர்கள்

(ஒஸ்லோ)

நோர்வே நாட்டைச் சேர்ந்த எம்.வி.பொனிட்டா கப்பலின் குழுவினரை ஆபிரிக்க கடற்கொள்ளையர்கள் கடத்தியதாக அக்கப்பல் நிறுவனம் தெரிவித்தது.

ஆபிரிக்கா கண்டத்திலுள்ள நைஜீரியா நாட்டின் அருகில் உள்ளது பெனின். அந்நாட்டின் கோட்டொனோ பகுதியில் உள்ள துறைமுகத்திற்கு கடந்த சனிக்கிழமை நோர்வே நாட்டைச் சேர்ந்த எம்.வி.பொனிட்டா கப்பல் சென்றது.

அக்கப்பலில் இருந்த கப்பல் ஊழியர்கள் 10 பேர் திடீரென மாயமானது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



இது குறித்து நோர்வேயை சேர்ந்த அந்த கப்பல் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ஜிப்சம் இறக்குமதி செய்வதற்காக பொனிட்டா கப்பல் கோட்டொனோ துறைமுக பகுதியில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது. திடீரென அங்கு நுழைந்த கடற்கொள்ளையர்கள் கப்பலில் இருந்த ஊழியர்களை கடத்திச் சென்றனர்.

அவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அவர்களை பற்றிய தகவல்கள் அவர்களது குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டவர்கள் யாரும் நோர்வே குடிமகன்கள் அல்ல, அனைவரும் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் என்று நோர்வே கப்பல் உரிமையாளர்கள் சங்கத்தை மேற்கோள்காட்டி நோர்வே ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்திகள் வெளியிட்டன. (2)

# நேபா…

# பலி எ…




(காத்மண்டு)

நேபாளத்தில் ஆற்றுக்குள் பேருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலியாகினர். காணாமல் போனவர்களை மீட்கும் பணி நடைபெறுகிறது. நேபாள நாட்டின் டோலாகா மாவட்டத்தில் இருந்து தலைநகர் காத்மண்டுவுக்கு கடந்த ஞாயிற்றுக்

கிழ… றது… உட… இரு… தில்… வே…

# கடல்மட்டம் உயர்வடைவதால் தெற்காசிய நாடுகள் பாதிப்படையும்

## ஐ.நா. செயலாளர் கவலை



(பாங்கொங்)

இந்தியா, பங்களாதேஷ், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் கடல் மட்டம் உயர்வதால் மிகவும் பாதிக்கும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் தெரிவித்தார்.

பாங்கொங்கில் நடைபெற்று வரும் ஆசிய நாடுகள் உச்சி மாநாட்டில் பங்கேற்றுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் தெரிவித்ததாவது,

2050ஆம் ஆண்டுக்குள் உலகில் 30 கோடி மக்கள் கடல் நீரால் பாதிக்கப்படுவார்கள் என ஒரு ஆய்வு எச்சரித்துள்ளது. பருவநிலை மாற்றத்தால் கடல் மட்டம் கணிக்கப்பட்டதைவிட வேகமாக உயர்ந்து வருகிறது. அரசுகளின் நடவடிக்கைகளைவிட பருவநிலை மாற்றம் வேகமாக இருப்பதுதான் இதற்கு காரணம்.

தென்கிழக்கு ஆசியா தான் மிகவும் பாதிக்கப்படும் பகுதியாக உள்ளது. இந்தியா, பங்களாதேஷ், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் கடல் மட்டம் உயர்வதால் மிகவும் பாதிக்கும் நாடுகளாகும். தாய்லாந்து மக்கள் தொகையில் 10 சதவீதம் பேர் கடல் வெள்ளத்தால் பாதிக்கப்படுவார்கள். தற்போதைய நிலையில் பூமிக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல் இது.

விஞ்ஞானிகள் சொல்வதை கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளதை அரசுகளுக்கும், உள்ளூர் நிர்வாகங்களுக்கும், மக்களுக்கும் ஐ.நா. கவலையுடன் கவனத்துக்கு கொண்டு வருகிறது. நிலத்தில் இருந்து எடுக்கப்படும் எரிபொருட்களுக்கு மானியம் வழங்குவதை நிறுத்த வேண்டும். நிலக்கரியை பயன்படுத்தும் புதிய அனல் மின்நிலையங்கள் நிறுவுவதை நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (2)

# கண்ணாடியிலான செயற்கைக்கோளை விண்வெளிக்கு அனுப்ப ரஷ்யா திட்டம்



(மொஸ்கோ)

புவியின் ஈர்ப்புப் புலத்தை துல்லியமாக அளவிட கோள வடிவிலான கண்ணாடி செயற்கைக் கோளை இந்த ஆண்டு இறுதிக்குள் அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யா, கனடா உள்ளிட்ட 15 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றன. இந்த விண்வெளி நிலையத்தில் வீரர்கள் தங்கியிருந்து ஆய்வுப் பணியை கவனிக்கின்றனர்.

இந்நிலையில், பூமியைப் பற்றி துல்லியமான புள்ளிவிபரங்களை அறியவும் ஈர்ப்புப்புலத்தை துல்லியமாக அளவிடவும் கோள வடிவிலான கண்ணாடி செயற்கைக்கோளை அனுப்ப ரஷ்ய விண்வெளி மையம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இது குறித்த ஆவணங்களில் உள்ள தகவல்களின் படி, பிலிட்ஸ்-எம் (BLITS-M) எனப்படும் இந்த கண்ணாடி செயற்கைக்கோள் ரஷ்யாவின் BLITS (பால் லென்ஸ் இன் தி ஸ்பேஸ்) செயற்கைக் கோளில் இருந்து மேம்படுத்தப்பட்டதாகும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி மூன்று கோனெட்ஸ்-எம் வகை தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களுடன் விண்ணில் செலுத்தப்படும்.

இது புவி இயற்பியல், புவி இயக்கவியல் மற்றும் சார்பியல் தொடர்பான செயற்கைக்கோள் லேசர் வரம்பின் (எஸ்.எல்.ஆர்) தரவைப் பெற வடிவமைக்கப்பட்டுள்ளது.


மேலும் ரஷ்ய குளோபல் சாட்டிலைட் நேவிகேஷன் சிஸ்டம் அமைப்பின் துல்லியத்தை அதிகரிக்கவும், சுற்றுப்பாதையில் பல்வேறு வானொலி அமைப்புகளை அளவீடு செய்யவும், பூமியின் சுழற்சி அளவுருக்கள் மற்றும் ஈர்ப்பு விசையின் துல்லியமான பண்புகள் ஆகியவற்றை தீர்மானிக்கவும் இது பயன்படுத்தப்படும். (2)


# பக்… துு…

(அங்… ஐ.எ… யின் சகே… கைது செ… யாகியுள்… உலக… றுத்தலா… ரவாத அ… பக்கர் அ… மாதம் ெ… அறிவித்… சிரியா… பாரிஷா … கத்தில் … துப்பறிந்… அமெரிக்… தது. தப்… நிலையி… குண்டுக… பலியான… இந்நி… சகோதரி … ரது கண… துருக்கி … தாக தக… இதனை…

# ளத்தில் பேருந்து விபத்து;

# ண்ணிக்கை 20 ஆக உயர்வு





கிழமை பேருந்து ஒன்று புறப்பட்டு சென்றது. பேருந்தில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 70இற்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். சிந்து பால்சவுக் மாவட்டத்தில் உள்ள மலைப் பாங்கான வீதியில் வேகமாக சென்று கொண்டிருந்தது.

அப்போது, பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடிய பேருந்து, வீதியில் இருந்து விலகி 165 அடி ஆழத்தில் உள்ள சன்கோஷி ஆற்றுக்குள் விழுந்தது. ஆற்றில் ஆழம் அதிகமாக இருந்ததால் பேருந்து நீரில் மூழ்கியது. விபத்து குறித்து தெரியவந்ததும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் விரைந்து சென்று, தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

3 மாத பச்சிளம் குழந்தையுடன் 6 சிறுவர்கள் உட்பட 20 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. படுகாயங்களுடன் 56 பேர் மீட்கப்பட்டனர். அவர்கள் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்துக்கான காரணம் என்ன? என்பது தெரியவில்லை. கடந்த மாதம் தலைநகர் காத்மண்டுவுக்கு அருகே அளவுக்கு அதிகமான ஆட்களை ஏற்றி சென்ற பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியானதும், 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (2)

## க்தாதியின் சகோதரி கைது
## துருக்கி அதிரடி நடவடிக்கை

அங்காரா)
ஐ.எஸ்.அமைப்பின் தலைவர் பக்தாதி
சகோதரியை துருக்கி அதிகாரிகள்
து செய்திருப்பதாக தகவல் வெளி
யுள்ளது.
உலகை நாடுகளுக்கு பெரும் அச்சு
லாக விளங்கிய ஐ.எஸ். பயங்க
த அமைப்பின் தலைவன், அபூ
ர் அல் பக்தாதி, சிரியாவில் கடந்த
ம் கொல்லப்பட்டதாக அமெரிக்கா
வித்தது.
ரியாவில் இட்லிப் நகருக்கு அருகே
ஷா என்ற கிராமத்தில் ஒரு வளா
ல் பக்தாதி, பதுங்கி இருப்பதை
றிந்து கடந்த மாதம் 26 ஆம் திகதி
ரிக்க சிறப்புப் படை சுற்றி வளைத்
தப்பிக்க ஒரு வழியும் இல்லை என்ற
லயில் தன் உடலில் கட்டியிருந்த
டுகளை வெடிக்க வைத்து பக்தாதி
ானதாக தெரிவிக்கப்பட்டது.
ந்நிலையில், பக்தாதியின் மூத்த
தரி ராஸ்மியா (வயது 65), அவ
ணவர் மற்றும் குடும்பத்தினரை
கி அதிகாரிகள் கைது செய்திருப்ப
தகவல்கள் வெளியாகியுள்ளன.
னை துருக்கி அதிகாரி ஒருவர்



கூறியதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டது.

வடக்கு சிரியாவில் உள்ள அலெப்போ மாகாணம் அஜாஸ் நகரில் கணவர் மற்றும் உறவினர்களுடன் வசித்து வந்த ராஸ்மியாவை நேற்று மாலை கைது செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் ராஸ்மியா தொடர்பில் இருக்கலாம் என நம்பப்படுகிறது. அவரை கைது செய்து விசாரணை நடத்துவதன் மூலம், உளவுத்துறைக்கு முக்கியமான தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2)

## போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது துப்பாக்கிச்சூடு; ஐவர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நிகழ்த்திய துப்பாக்கிச்சூட்டில் போராட்டக்காரர்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் ஊழல் மற்றும் வேலையின்மை அதிகரித்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டு மக்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். கடந்த மாதம் முதலாம் திகதி தொடங்கி நடந்து வரும் இந்த தொடர் போராட்டத்தில் இதுவரை 250 இற்கும் அதிகமானோர் பலியாகி விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசு இதுவரை முறையாக அறிவிக்கவில்லை.



தலைநகர் பக்தாத்தில் இருந்து 100 கி.மீ. தொலைவில் இருக்கும் கர்பாலா நகரில் உள்ள ஈரான் நாட்டின் தூதரகத்தின் முன்பு நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். கர்பாலா நகர் சுதந்திரம் பெற்றுவிட்டதாகவும், ஈரான் தூதரகம் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழங்கினர்.

அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் தூதரகத்தின் நுழைவாயிலில் டயர்களை தீவைத்து கொளுத்தினர். மேலும் தூதரகத்தின் சுற்றுச் சுவர் மீது கற்களையும், வெடி பொருட்களையும் வீசி எறிந்தனர். இதையடுத்து போராட்டக்காரர்களை விரட்டியடிக்க பாதுகாப்பு படைவீரர்கள் தடியடி நடத்தியதோடு, கண்ணீர் புகை குண்டுகளையும் வீசினர்.

ஆனாலும் நிலைமை கட்டுக்குள் வராததால் பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் போராட்டக்காரர்கள் 5 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். (2)

## புகலிடக் கோரிக்கையாளர்கள்

# அகதிகள் பாதுகாப்பில் இலங்கை படுதோல்வி

## சர்வதேச மன்னிப்புச் சபை சாடல்

(லண்டன்)

**அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான போதுமான பாதுகாப்பை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியது.**

இது தொடர்பில் மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்ட அறிக்கையில்,


இலங்கையில் தங்கியிருந்த அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள், அவர்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில் அது குறித்த முறையான பொலிஸ் விசாரணைகள் இடம் பெறாததுடன் அவர்களுக்கான நீதி பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அதற்குப் பழிவாங்கும் வகையில் பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் மீது கும்பலொன்றால் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து வெளியேறிச்சென்று அருகிலுள்ள சன சமூக நிலையத்திலும் பொலிஸ் நிலையத்திலும் தஞ்சம் கோரி தங்கியிருந்த போதிலும் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில் அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான போதுமான பாதுகாப்பை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கும் அதேவேளை, அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தும் பணியிலிருந்தும் விலகியுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கடுமையாக சாடியுள்ளது. (இ-7)

# வெலிக்கடை சிறைப் படுகொலை சாட்சியத்தில் கோத்தாவின் பெயர்

## அதிகாரி குறிப்பிட்டதாக சிங்கள ஊடகம் தகவல்



(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் மூன்று நீதிபதிகள் அடங்கிய விசேட மேல் நீதிமன்ற அமர்வில் சாட்சியமளித்த சிறைச்சாலை அதிகாரி குடா பண்டா, கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரைக் குறிப்பிட்டார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி நடந்த இந்த சம்பவத்தின் போது சிறைச்சாலைக்குச் சென்ற இரண்டு இராணுவ அதிகாரிகள், கொண்ட அமில, வோட்பிளேஸ் ஷியாம் ஆகியோர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என கேட்டதாகவும் அப்போது தான் கொண்ட அமில, மகர சிறையிலும் வோட்பிளேஸ் ஷியாம் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருப்பதாக கூறியதாக குடா பண்டா தெரிவித்தார்.

இதனிடையே அந்த இராணுவ அதிகாரிகளில் ஒருவர் நீங்கள் யாருடைய பட்டியலுடன் செயற்படப் போகிறீர்கள் என மற்றைய இராணுவ அதிகாரியிடம் கேட்டதாகவும் அவர் கோத்தபாயவின் பட்டியல் எனக் கூறியதாகவும் சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார்.

அப்போது குடா பண்டாவிடம் குறுக்குக் கேள்வி கேட்கப்பட்டது. ளது. கோத்தபாயவின் பட்டியல் என்பது யாருடைய பட்டியல் என கேட்கப்பட்ட போது, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் பட்டியல் என குடா பண்டா தெரிவித்தார்.

இதன்போது, குற்றம் சுமத்தப்பட்டவர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், வழக்கு அறிக்கையில் இந்தப் பகுதியை நீக்குமாறு கேட்டுள்ளனர்.

ஆனால் நீதிமன்றம் அதனை நிராகரித்துள்ளதாக தெரிய வருகிறது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

சிறைச்சாலை அதிகாரி குடா பண்டா, சம்பவம் நடந்த காலப் பகுதியில் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பிரதான பதில் சிறை அத்தியட்சகராக பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீரவன்சவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச உட்பட 6 சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி, பொதுமக்களுக்கு தொந்தரவை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு தொடர்பிலேயே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இளம் பருவம்!

என்ன சேர்... உங்க பையன் என்ன செய்துகொண்டிருக்கிறான் இப்போ? என்று கேட்டார் ஒருத்தர். அடிக்கடி கண்ணாடி முன்னாலே நின்று அழகு பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்றார் அப்பா. இளம் பருவம் இப்படித்தான் இருக்கும். அதையெல்லாம் சாதாரணமாக நினைத்து விடாதையுங்கள் என்றார்.

என்ன சேர் சொல்கிறீர்கள்... கண்ணாடி முன்னாடி நின்று கொண்டு நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றான்.... அதை ஒரு பெரிய விடயமாக நான் நினைக்க வேண்டுமா? என்றார் இவர். இளம் பருவத்திலேயே இளைஞர்களுக்கும் சின்ன பெண்களுக்கும் அடிக்கடி கண்ணாடியில் பார்க்க வேண்டும் என்று தோன்றும். அது வெறுமனமே அழகு பார்க்கிறது மட்டுமல்ல அவர்களையே அவர்கள் தேடிக் கண்டுபிடிக்கிற முயற்சி. அது ஒரு மனோதத்துவ விளைவு!

இதுவரைக்கும் சின்னப் பிள்ளையாக இருந்துவிட்டோம்! இனிமேல் நாங்களும் மற்றவர்கள் மாதிரி மனிதர் தான் என்கிற உணர்வு அவர்களுக்கு வருகிறது தங்களுடைய முகம் எப்படி இருக்கு, அழகு எப்படி இருக்கு, உடம்பு, நிறம் எப்படியிருக்கு, முடி எப்படியிருக்கு என்பதெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். அதுக்குப் பின்பு இன்னொரு ஆணோ பெண்ணோ தன்னைக் கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இதெல்லாம் இயற்கை...இதைப் பார்த்து விட்டு பெற்றவர்கள் பிள்ளைகள் கெட்டுவிட்டார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்களைத் திட்டிக் கொண்டே இருக்கக்கூடாது. இன்றைக்குப் பல குடும்பத்தில் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

மனித வாழ்க்கையில் இப்படியும் இல்லாத அப்படியும் இல்லாத ஒரு பருவம் இளம் பருவம். 13 வயதிலிருந்து 19 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களைச் சின்னவர்கள் என்றும் நினைத்துவிட முடியாது. பெரியவர்கள் என்றும் நினைத்துவிட முடியாது.

இவர்கள் ரொம்ப சென்சிட்டிவ்! சமூகம் நினைத்தால் இவர்களை நல்லவர்களாகவும் ஆக்கலாம், கெட்டவர்களாகவும் மாற்றலாம். கொஞ்சம் அக்கறை எடுத்தால் பெரிய பெரிய விஞ்ஞானிகளையும் உருவாக்கலாம். ஆனால் நடக்கிறது என்ன தெரியுமா? அநேகமாக அவர்களை யாரும் சரியாகப் புரிந்து கொள்வது இல்லை. இவர்களை யாரும் சரியாக நடத்திறதும் இல்லை!

இதுவரைக்கும் நாம் சொல்லுறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். இப்ப எல்லாம் அவன் இஷ்டத்துக்கு நடக்க ஆரம்பித்துவிட்டான் என்று வருத்தப்படுகிற பெற்றோர்கள் அதிகம். இது வருத்தப்படுகிற விடயமல்ல சேர். சந்தோசப்படுகின்ற விடயம்.

உங்கள் பிள்ளைகளை சொந்தமாக யோசிக்க ஆரம்பிக்கிறதும் நடந்துகொள்ள ஆரம்பிக்கிறதும் ஒரு தப்பான விடயமா? அவன் கடைசி வரைக்கும் உங்கள் பேச்சையே கேட்டுக் கொண்டிருக்கிறதும் என்ன நியாயம்?

இன்றைக்கு இளைஞர்களை பெரியவர்கள் தப்பா புரிந்து கொண்டு நடத்துகிறதனாலே தான் அவர்களுக்கு வெறுப்பு, எரிச்சல், மனக்கசப்பு எல்லாம் ஏற்படுகின்றது. பெற்றவர்கள் சரியாக மதிக்கிறதில்லை என்கின்ற ஒரே காரணத்தினாலேயே வீணாப் போகிற பிள்ளைகள் இன்றைக்கு அதிகம். சரி...பெற்றவர்களுக்கு என்னதான் புத்தி சொல்ல வருகிறீர்கள் என்று கேட்கிறீர்களா?

அது சம்பந்தமான சில நிபுணர்கள் சொல்லியிருக்கிறதை உங்கள் காதிலேயும் போட்டு வைத்திருக்கின்றேன். அவ்வளவு தான்! பிள்ளைகளிடம் அன்பு செலுத்துங்கள். குழந்தையாக இருந்தபோது எவ்வளவு பாசமாக இருந்தீர்கள்? வளர வளர அதை ஏன் குறைக்கிறீர்கள்?

பெற்றவர்களுடைய அன்பான வார்த்தைகளுக்கு ஏங்குகிறவர்கள் தான் இன்றைய இளைஞர்கள்!

அவர்கள் எதைச்சொன்னாலும் அதை அக்கறையாகக் காது கொடுத்துக் கேளுங்கள். அலட்சியப்படுத்தாதீர்கள்! அவர்கள் விரும்புவது உங்களிடம் இருந்து ஒரு மதிப்பு, மரியாதை, அங்கீகாரம் இவ்வளவுதான்!

அவர்கள் அவர்களாகவே முடிவுகள் எடுக்கட்டும். அதுக்கு நீங்கள் உதவியாக இருங்கள். அது போதும். மற்றவர்கள் முன்னாடி முக்கியமாக அவர்கள் நண்பர்கள் முன்னாடி அவர்களைப் பற்றி மட்டமாகப் பேசாதீர்கள்.

ஒப்பிட்டுப் பேசுகிற வேலை வேண்டாம்! கூடப் பிறந்தவர்களை மற்றவர்களோடு ஒப்பிடக் கூடாது. இப்படித் செய்தால் அவன் உங்களிடமும் பிரியமாக இருக்க மாட்டான். அவர்களிடமும் பிரியமாக இருக்க மாட்டான். பிள்ளை எங்கே போகிறான். என்ன செய்கிறான் என்று துப்பறிந்து கொண்டு இருக்காதீர்கள். இளைஞர்கள் தனிமையை விரும்புவார்கள். அவர்களை பெட்டியலே வைத்து மூடி பாதுகாக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். அவர்களை எப்படிப் பாதுகாத்தக் கொள்வது என்பது அவர்களுக்கே தெரியும். உங்கள் பிள்ளை எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அதேமாதிரி நீங்கள் நடந்து காட்டுங்கள் அதுபோதும்.

ஒரு அம்மா தன் மகள் பெரியவளாகிவிட்டாள் என்று தன் கணவனிடம் சொன்னாள். அடிக்கடி கண்ணாடி முன்னால் போய் நின்றுகொண்டிருக்கிறாள். விரைவில் ஒரு பையனைப் பார்த்து கல்யாணத்தை முடிக்காமல் இப்படி இருக்கிறீர்களே...

அவசரப்படாதே...பார்க்கிறதுக்கு அழகாக, இலட்சணமா, புத்திசாலியா ஒரு பையன் கிடைக்க வேண்டாமா? அதுதான் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்றார் அப்பா.

இதற்கு அந்த அம்மா இப்படி நினைத்திருந்தால் எனக்கு கல்யாணமே ஆகியிருக்காது என்றார்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வடமாகாணத்திலுள்ள அந்நியச் செலாவணி ஈட்டித்தரக்கூடிய மருத்துவ முக்கியத்துவமுடைய மூலிகைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)


அமல்பொரி அல்லது பாம்புக்களா

**Botanical Name- Rauvolfia serpentina**

**Family- Apocynaceae**

இது தூய இன மூலிகையாகும். கூடுதலாக மலைப் பிரதேசங்களில் வளரக்கூடியது. ஆனாலும் வடமாகாண காடுகளிலும் அங்கு இங்கு அரிதாக வளர்ந்து காணப்படுகின்றது. இதற்கு மாற்று மூலிகையாக பயன்படுத்தப்படும் காட்டு பாம்புக்களா (Rauvolfia tetraphylla) வடமாகாண தரிசு நிலங்களில் இயற்கையாகப் பரம்பிக் காணப்படுகிறது.

இம்மூலிகையின் வேர் இரத்த அமுத்த நோயைக் குணமாக்குகிறது. இம் மூலிகையை விதை மூலமாகவோ தண்டுக்குச்சிகள் மூலமாகவோ பயிர்ப் பெருக்கம் செய்யலாம். செடியினத்தைச் சேர்ந்தது. நட்டு 18 மாதங்களில் வேர்களைத் தோண்டி எடுத்து








சேகரிக்க வேண்டும். வேர்களைக் குளிர்காலத்தில் சேகரிப்பது நல்லது. ஏனெனில் அப்பொழுது தான் வேர்களில் வேதியற் பொருட்கள் அதிகமாகக் கிடைக்கும்.

இதே மூலிகை இந்தியாவிலிருந்து அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.



ஊமத்தை

**Botanical Name- Datura discolor**

**Family-Solanaceae**

ஊமத்தையும் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் மூலிகைகளுள் ஒன்றாகும். இதுஒருகுறுஞ்செடி.வெள்ளை நிறப்பூக்கள், மஞ்சள் நிறப் பூக்கள், பொன்னூமத்தை, கருமை நீல நிற அல்லி இதழ்களையுடைய கரு ஊமத்தை எனப்பலவகை இருந் தாலும் கரு ஊமத்தை அதிக மருத்துவ குணங்கள் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இதன் இலைச்சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் புரை ஓடிய புண்களை ஆற்ற இலைகளை வாட்டி கட்டிகளைப் பழுக்கப் பண்ணுவதற்கும் உலர்ந்த இலைகளை சுருட்டாகச் சுருட்டி புகைப்பிடிக்கும் போது ஆஸ்துமா நோயைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது. இதன் விதைகள் இசிவகற்றியாகப் பயன்படுத்தப்படுகிறது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். நட்டு 24 மாதங்கள் வயதுடைய செடியிலிருந்து இலைகள், விதைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இதன் விதைகளும் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் ஒரு கிலோ ஊமத்தம் இலைகள் 250 ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

நிலவேம்பு

வடமாகாணத்தில் வளரக்கூடிய நில்வேம்பு நாட்டு நிலவேம்பும் காட்டு நில வேம்புமாகும். ஆனால் வணிகத்தில் நாட்டு நிலவேம்பிற்கே மவுசு அதிகமாகும்.

**Botanical Name- Andrographis poniculata**

**Family- Acanthaceae**

காய்ச்சல் அல்லது சுரத்தைக் கட்டுப்படுத்தும் முக்கிய மூலிகையாகும். மிகவும் கசப்புச் சுவையுடையது. விதைகள் மூலம் இனவிருத்திசெய்யலாம். செடி இனத்தைச் சேர்ந்தது. முழுச்செடியும் மருந்தில் பயன்படுத்தப்படுகிறது.

விதைகளை விதைத்து 18 மாதங்களின்பின் செடியைமண்ணிலிருந்து தோண்டி எடுக்கலாம். சிலர் இதனை சிறியாள் நங்கை என்று கூறுவர். அது தவறு. சிறியாள் நங்கை என்பது வேறு மூலிகை. இலைகளை ஒடித்தால் பால்வரும். சிறியா நங்கை எனும் மூலிகை **polygala chinesis** என இணங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது. நீரிழிவு நோய் உள்ளவர்களும் தினமும் 4 இலைகள் சாப்பிட்டு வர நீரிழிவு நோய் கட்டுப்படும். ஒரு கிலோ நிலவேம்பின் விலை -2000 ரூபா.

அமுக்கிரா

**Botanical Name-Withania Somnifera**

**Family- Solanaceae**

இது ஓர் காயகற்ப மூலிகையாகும். கற்ப முறைப்படி சாப்பிட்டு வர நரம்புத்தளர்ச்சி, உடல் நடுக்கத்தைத் தடுக்கும். உடலுக்கு வன்மை தரும். அளவான நீர்ப்பாசனத்துடன் கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் வளரக்கூடிய செடியாகும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைத்து 4-6 மாதங்களில் செடிகளை மண் ணிலிருந்து தோண்டி எடுத்து பக்க வேர்களைச் சேகரிக்கலாம். ஒரு கிலோ அமுக்கிரா வேரின் விலை 950 ரூபா.

கண்டங்கத்தரி

**Botanical Name- Solanum xanthocarpum**

**Family- Solonaceae**

தரையோடு படர்ந்து வளரும் தரைபடர் தாவரமாகும். முட்களைக் கொண்டது. மணற்பாங்கான பிரதேசங்களில் அதிகமாக வளரக்கூடியது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். சுலாசாசய நோய்களில் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. விதைகளை விதைத்து 4-6 மாதங்களில் அறுவடை செய்யலாம். இந்தியாவிலிருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஒரு கிலோ கண்டங்கத்தரியின் விலை 800 ரூபாவாகும்.


சிறுநெருஞ்சில்

**Botanical Name- Tribulus terrestris**

**Family-Zygophyllaceae**


சிறு இனத்தைச் சேர்ந்தது.













இதன் காய்களில் முட்கள் உள்ள இனம் தூய இனமாக கொள்ளப்படுகின்றது. சிறுநீரகக் கற்களை கரைக்கும் திறனும் சிறுநீரை அதிக்ளவு வெளியே ற்றும் தன்மையும் கொண்-டது். விதைகளை விதைத்து 18 மாதங்களில் அறுவடை செய்யலாம். ஒரு கிலோ சிறுநெருஞ்சிலின் விதை 800 ரூபாவாகும்.

அவுரி

**Botanical Name- Indigofera tinctoria**

**Family- Legurhinosal**

குத்துச் செடி வகையைச் சேர்ந்தது. இதிலிருந்து **Blue dye** பிரித்தெடுக்கப்படுகின்றது. இதன் இலைகள், வேர் அனைத்தும் மருத்துவ குணங்கள் மிகுந்தவை. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைகளை விதைத்து 10 மாதங்களில் இலைகளைச் சேகரிக்கலாம்.

ஒரு கிலோ அவுரியின் விலை 800 ரூபாவாகும். இதன் இலைச்சாறிலிருந்து முடிச்சாயங்களும் தயாரிக்கப்படுகின்றது. இந்தியாவிலிரு ந்து அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

சிறுநன்னாரி

**Botanical Name-Hemidismus indicus**

**Family name-Ascl-epiad aceae**

**Tamil name-** சிறுநன்னாரி

இதுஓர்காயகல்பமூலிகையாகும். செடி இனத்தைச் சேர்ந்தது. நறுமணமுள்ள செடியாகும். சித்தமருத்துவத்தில் பல மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. இரத்தத்தைச் சுத்திகரிக்கும் தன்மை யும் சிறுநீர் பெருக்கி, பலமுண்டாக்கி செய்கைகளைக் கொண்டது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைத்து 18 மாதங்களில் வேர்களைத் தோண்டி எடுக்கலாம். வேர் மிகுந்த நறுமணம் கொண்டது. இந்தியாவிலிருந்து ஜப்பான், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் ஒருகிலோ நன்னாரியின் விலை 3500 ரூபாவாகும். (முற்றும்)

# சாமர்த்தியமான தாதியத்தலைவர் கௌரவிப்பு




வடமாகாணத்தில் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் தாதியர்களிடையே சாமர்த்தியமான (SMART NURSING LEADER) தாதியத் தலைவர் ஒருவரை தெரிவு செய்து கௌரவிப்பதற்கு புதிய வாழ்வு நிறுவனம் தீர்மானித்து, அதன்பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான தாதியர் தேர்வானது வடமாகாணத்தில் கடமைபுரியும் தாதிய உத்தியோகத்தர்களின் வாக்கெடுத்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டது. இதில் தெரிவு செய்யப்பட்ட சாமர்த்தியமான தாதியத்தலைவர் கௌரவிப்பு நிகழ்வானது கடந்த மாதம் 20 ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள வன்னிபிளாசா (Rose garden) வரவேற்பு மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக தாதியக் கல்விப் பணிப்பாளர் ரயுலாதேவி வல்லிபுரநாதனும் சாமர்த்தியமான தாதியத்தலைவர் தேர்வுக்குழுவின் தலைவரும் வவுனியா தாதிய பயிற்சிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமான திருமதி கருணைலிங்கம் சோதிலிமலர் மற்றும் பதில் அதிபர் திருமதி சதானந்தி நந்தகுமார், வவுனியா பொது வைத்தியசாலையின் ஓய்வுபெற்ற தாதியப் பரிபாலகரும் வவுனியா தாதிய பயிற்சிக் கல்லூரியின் வருகை தரு விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி மகாலட்சுமி கனகரட்ணமும் கலந்து கொண்டனர். புதுவாழ்வு நிறுவனத்தின் சார்பில் றொபேட் கிளின்ரனும் விஜயானந்தனும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை யாழ்.போதனா வைத்தியசாலை பிரதான தாதியப்பரிபாலகர் சந்திரமௌலீஸ்வரனும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பிரதான தாதிய பரிபாலகர் எஸ்.ராஜேந்திரனும் இணைந்து வழிநடத்தினர்.

பல சிரேஷ்ட, கனிஷ்ட தாதிய உத்தியோகத்தர் முன்னிலை யில் 2019 ஆம் ஆண்டிற்கான சாமர்த்தியமான தாதியத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு பிரதான தாதியப்பரிபாலகரான எஸ்.பாலநாதன், தாதியக்கல்விப் பணிப்பாரான ரயூலாவல்லிபுர நாதனால் கேடயமும் சான்றிதமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தாதியக்கல்விப்பணிப்பாளர், மேற்படியான நிகழ்வுகள் இளம் தாதிய உத்தியோகத்தரிடையே சேவை மனப்பான்மை விருத்தியையும் தாமும் மேற்படியான கௌரவிப்பைப்பெற வேண்டும் என்ற உந்துதலில் பொது சேவையில் கூடுதலான ஈடுபாட்டை காண்பிக்கும் தன்மையையும் ஏற்படுத்தும் என்பதால் இது போன்ற நிகழ்வுகளை வருடாந்தம் தொடர்ச்சியாக நடத்தி வருவது தாதிய சமூகத்தின் கௌரவத்தை மேம்படுத்தி வட மாகாணத்தில் கூடுதலான மாணவர்களின் விருப்பத்தேர்வாக தாதியத் தொழிலை தேர்வு செய்வதற்கு வழி கோலும் என்று கூறினார்.

நிகழ்வின் இறுதியாக எதிர் வரும் காலங்களில் சாமர்த்திய தாதியத்தலைவரை தேர்வு செய்வதற்கான ஓர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஜ)

# கடமையிலிருந்த வைத்தியர் மீது தாக்குதல் வடமாகாண மருத்துவர் மன்றம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வைத்தியசாலையில் கடமையிலிருந்த வைத்தியர் (04.11.2019) தாக்கப்பட்ட சம்பவத்தை வடமாகாண மருத்துவர் மன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மிகக் குறைந்த வைத்தியர்களுடன் அதிகளவான வெளி நோயாளர்களையும் விடுதி நோயாளர்களையும் இரவு-பகல் சேவையாக பராமரித்துவரும் அச்சுவேலி வைத்தியசாலை வைத்தியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

முறையாக வைத்தியர்களுக்கான இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் அதீத வேலைப்பளு காரணமாக இரவுக் கடமையின்பின் தொடர்ச்சியாக பகல் வேளையில் வெளி நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வந்த வைத்தியரே தாக்கப்பட்டுள்ளார்.

வைத்தியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு முறையான இடமாற்றத்தின் மூலம் வைத்திய ஆளணியை அதிகரிக்க உரிய தரப்புக்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அவ்வாறு தவறும் பட்சத்தில் பொதுமக்களுக்கான வைத்திய சேவைகள் பாதிப்படைவதைத் தவிர்க்க முடியாதிருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் இவ்வாறான இடரின் மத்தியில் சேவையாற்றும் வைத்தியர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் பொது மக்களை கேட்டுக் கொள்கிறோம் என அந்த மன்றத்தின் செயலாளர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-60)

# துவிச்சக்கர வண்டியைப் பெற்றுக் கொள்ளவும்

(கரணவாய்)

பொலிஸ் நிலையத்திலுள்ள துவிச்சக்கர வண்டியை உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை துவிச்சக்கரவண்டியுடன் திருட்டு குற்றச்சாட்டில் ஒருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்று மீட்கப்பட்டது. எனவே அந்த துவிச்சக்கரவண்டிக்கு உரியவர் தகுந்த ஆதாரத்தை அச்சுவேலி பொலிஸில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (இ-5-60)

# வலிகாமத்தின் வர்ணம்-2019 ஓவியக் கண்காட்சி நாளை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வலிகாமத்தின் வர்ணம் - 2019 ஓவியக் கண்காட்சி நாள்ள 7 ஆம் திகதி வியா ழக்கிழமை முற்பகல் 10 மணியளவிலும் மறுநாள் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் வலயக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக ரி.பி.ஹுன்ற் பணிப்பாளர் திருமதி. யோ.இவாஞ்ஜெலின் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 90 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 115 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 280 | 140 | 300 |
| தக்காளி | 140 | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 100 | 80 |
| கோவா | 160 | 140 | 90 | 160 |
| கரட் | 200 | 230 | 200 | 300 |
| பூசணி | 100 | 70 | 90 | 120 |
| புடோல் | 140 | 120 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 200 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 160 | 120 |
| பாகற்காய் | 200 | 260 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 80 | 120 |
| பயற்றங்காய் | 140 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 180 | 140 | 240 |
| பீற்றூட் | 120 | 80 | 70 | 120 |
| கறிமிளகாய் | 300 | 260 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 300 | 300 |
| போஞ்சி | 140 | 160 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 60 | 140 |
| கீரை-1பிடி | 60 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | – | – | 150 | – |
| வெங்காயப்பூ | – | – | – | – |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 160 | 100 |


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4 ஆம் பாதம்
கி.பா: 9 ¾
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Q.S (ICBT London Campas கனடா PR
எதிர்பார்ப்பு:ஆங்கில அறிவுள்ள கனடாவில் வசிக்கின்ற அல்லது கனடா செல்லக்கூடிய பெண்
தொ.இ: B/10202

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1 ஆம் பாதம்
கி.பா: 27 செவ்.12 இல்
தகைமை/தொழில்:O/L கடை சொந்தம்
எதிர்பார்ப்பு: சாதாரணமான பெண்
தொ.இ: B/10204

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2 ஆம் பாதம்
கி.பா: 21
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L Electrician (Canada not PR)
எதிர்பார்ப்பு: PR உள்ள கனடா பெண் மட்டும்
தொ.இ: B/10205

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4ஆம் பாதம்
உயரம்: 5'7"
கி.பா: 53
தகைமை/தொழில்:Electrical and Electronic Engineering (HNDE-colombo) Business
எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள படித்த பெண்
தொ.இ: B/10207

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம் 4 ஆம் பாதம்
உயரம்: 165 cm
கி.பா: 15 ½
தகைமை/தொழில் :Bsc, Msc ஆசிரியர்
எதிர்பார்ப்பு: எஞ்ஜினியர்
தொ.இ: G/6428

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4 ஆம் பாதம்
கி.பா: 13 ½ செவ்.4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA (peradeniya)
எதிர்பார்ப்பு: படித்தவெளிநாட்டு வரன்
தொ.இ: G/10201

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மூலம் 3 ஆம் பாதம்
கி.பா: 12 ½ செவ்.2 இல்
உயரம்: 150 cm
தகைமை/தொழில்:A/L (முன்பள்ளி டிப்ளோமா) முன்பள்ளி ஆசிரியர்
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ: G/10203

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3 ஆம் பாதம்
கி.பா: 44 செவ்.1 இல்
உயரம்:163 cm
தகைமை/தொழில்: Bsc உதவி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் (உயர் பதவி)
தொ.இ: G/10206

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கையில் மேலும் முதலீடுகளை மேற்கொள்ள சீனாவின் முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர்

## சீனத்தூதுவர் தகவல்



(கொழும்பு)

இலங்கையில் மேலும் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சீனாவின் முதலீட்டாளர்கள் ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சியுவான் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சிறந்த நல்லுறவு நிலவுகின்றதென்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையில் மேலும் பல சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர், இது இலங்கைக்கு மிகப்பெரிய வாய்ப்பாக இருக்கும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஆஸி செல்ல முயற்சித்த 13 இலங்கையர்கள் கைது

(சிலாபம்)

சிலாபம் பகுதியிலிருந்து படகு வழியாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 13 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த இவர்கள் தொடர்பில் பொலிஸாரிடம் விடுதி நிர்வாகத்தினர் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனடிப்படையில், சந்தேகத்தின் பேரில் 11 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் உள்ளடங்கலாக 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்பில் போதிய ஆதாரம் இல்லாத காரணத்தினால் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் கடுமையான எல்லைப்பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வரும் அவுஸ்திரேலியாவை ஆளும் லிபரல் கூட்டணி அரசாங்கம், படகு வழியாக வருபவர்களை ஒருபோதும் அவுஸ்திரேலியாவுக்குள் குடியேற்ற விடமாட்டோம் எனக் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ரயில் இயந்திரங்கள் இறக்குமதி



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து 3 ரயில் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

10 ரயில் இயந்திரங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவிருக்கும் நிலையில் தற்போது வரையில் 8 ரயில் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அவற்றை விரைவில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு ரயில் இயந்திரம் பதுளைக்கும் கொழும்புக்கும் இடையில் சேவையில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தூர் பொதுநூலகத்தால் நூல் கண்காட்சி அண்மையில் நடத்தப்பட்டது.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்

## சுற்றுலாத்துறை அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுமென சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய இந்த வருடத்தின் இறுதி இரண்டு மாத காலப் பகுதியில் 4 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 மில்லியனை விடவும் அதிகரிக்கும் என் மேலும் தெரிவித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற தாக்குதலையடுத்து சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


உங்கள்
கல்யாண
மாலை
பல நூற்றுக்கு மேற்பட்ட
திருமணங்களை பொருத்திய சாதனை
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1000/-
சேவைக் கட்டணம் ரூபாய் 300 /-
தொடர்பு – கல்யாணமாலை இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005, 021 221 5434
Email : Kalyanamalai.jaffna@gmail.com

உங்கள் வலம்புரி
Registered as a Newspaper in Srilanka
Valampurii
website : www.valampurii.lk Viber : 076 636 3378
E-mail : valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
T.P : 021 221 7603 Fax : 021 222 7829

20ஆவது ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேவையுடன்
20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது.
இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட,
விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக
வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின்
விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை
முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள்.
அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள்
வலம்புரி விசேட சலுகைக்
கட்டணத்தில்
மரண அறிவித்தல்
கண்ணீர் அஞ்சலி
நினைவஞ்சலி
ஆகிய விளம்பரங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழ்
தாயகம் எங்கும் வியாபித்துள்ள வலம்புரி 20ஆவது ஆண்டு நிறைவில்
இன்னும் புதுப் பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# உடன்பாட்டுக்கு வரமறுக்கும் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கோர எமக்கு தார்மீக உரிமையில்லை



## ஈ.பி.ஆர்.எல்.எப்பின் நிலைப்பாடு குறித்து சுரேஷ் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமது எதிர்காலம், தமது பாதுகாப்பு, தமது சுயமரியாதை, தமது இருப்பு இவற்றை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைப்பது நியாயமானதே. அவ்வாறான கோரிக்கைகள் தொடர்பாக பேசவோ, அல்லது ஒரு உடன்பாட்டிற்கு வரவோ மறுக்கின்ற கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு எமது மக்களைக் கோருவதற்கு எமக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்.

பிரித்தானிய காலனியாதிக்கத்தின் இறுதிப்பகுதியிலிருந்தே சிங்கள் பௌத்த மேலாதிக்க சிந்தனை மேலோங்கியதன் காரணமாக இந்நாட்டின் சமபங்காளிகளான தமிழ்த் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரித்தானியர்களிடமிருந்து சூழ்ச்சிகரமான முறையில் தமிழ் மக்களின் இறைமையைப் பறித்துக்கொண்ட சிங்கள பௌத்த தேசியம் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய இனத்தை இரண்டாந்தரக் குடிமக்களாகவும் தனது மேலாதிக்க சிந்தனைக்கு அடிபணியும் சக்தியாகவும் மாற்ற முற்பட்டது. தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிப்பது மற்றும் அதனை தன்னுடன் இரண்டறக் கலக்கச் செய்வது என்னும் கோட்பாட்டை சிங்கள தேசியம் வெகு கச்சிதமான முறையில் நன்கு திட்டமிட்ட முறையில் கட்டமைக்கப்பட்ட வடிவத்தில் மேற்கொண்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனம் தனது அடையாளத்தையும் உரிமைகளையும் சுயமரியாதையையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவே சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்திற்கு எதிராக பலவழிகளிலும்போராடி வருகின்றது.

இந்த யதார்த்தம் இன்று சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இதுவரைகாலமும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்து ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களிலும் தென்னிலங்கை ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் போட்டியிட்டன. ஆனால் தேர்தலில் வெற்றி பெற்ற கையுடன் தமது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசிய இனம் ஏமாற்றப்பட்டதே இந்நாட்டின் வரலாறு.

எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் புதிய ஜனாதிபதி ஆற்ற வேண்டிய கடமைகள் தொடர்பாகவும் ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பிலும் பதின்மூன்று அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஐந்து அரசியல் கட்சிகளும் வடக்கு-கிழக்கு பல்கலைக் கழக சமூகமும் தமிழ் சிவில் சமூக அமைப்புக்களும் முன்வைத்திருந்தோம். அதனை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது அது தொடர்பான கலந்துரையாடலை நடத்துவதற்கோ அல்லது அது தொடர்பில் ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கோ எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் முன்வரவில்லை என்பதை எமது மக்களுக்கு நாம் தெரிவித்துக்கொள்கிறோம். இருந்த பொழுதும்கூட, சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கடந்த ஐந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியல் சாசனத்திற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும், அது சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக நிறைவேற்றப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல், புதியதோர் அரசியல் சாசனத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது என்பதுடன், அப்படி நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அது ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னெடுத்துச் செல்லப்படலாம். ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்த கடந்த ஐந்தாண்டுகளில் செய்ய முடியாத புதிய அரசியல் சாசன விடயத்தை குறைந்த பட்சம் அறுதிப் பெரும்பான்மையே இல்லாத இன்றைய அரசாங்கத்தால் எவ்வாறு நிறைவேற்ற முடியும்? ஆகவே தமிழ் மக்களின் கண் துடைப்பிற்காகவே அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நாம் கருதுகின்றோம். கடந்த ஐந்தாண்டுகளில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு குறித்து பேசப்பட்டதே தவிர, சமஷ்டிக்குள் அதிகாரப்பகிர்வு குறித்து பேசப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் காணிகளை விடுவிப்பதற்காக ஜனாதிபதியினால் மூன்றுமுறை காலக்கெடு விதிக்கப்பட்டும்கூட அவர் உறுதியளித்தவாறு காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதே நேரம், காணிகளை விடுவிக்கக் கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதிகோரியும், அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் நீண்ட போராட்டங்கள் நடைபெறுகின்ற பொழுதும்கூட, இந்த விடயங்கள் தொடர்பாக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆனால் புதிய ஜனாதிபதி வந்தால் இவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது. இதே உத்தரவாதங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் மைத்திரிபால சிறிசேனவினாலும் நல்லாட்சி அரசாங்கத்தினாலும் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே இவை அனைத்தும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது. மறுபுறத்தில் பொதுஜன பெரமுனவையும் அதன் வேட்பாளரையும் பார்க்கின்றபொழுது, அவர்கள் அதிதீவிரவாத இராணுவவாதக் கண்ணோட்டம் உள்ளவர்களாகவும், நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில், தமிழ் மக்களை அடக்கி ஆள்வதே அவர்களின் நிலைப்பாடாகவும் தோன்றுகின்றது. நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் மாத்திரமே இவர்களால் பேசப்படுகின்றது என்பதுடன், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவோ, அவற்றிற்கான தீர்வு எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பாகவோ தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவோ இவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவுமே கூறப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1880

### லது


ஆன்டி... அம்மா ஒரு கப் சீனி கேட்டாங்க... தாறேன் குட்டி... வேற என்ன சொன்னாங்க...



இந்த கிறுக்கி தரலைனா எதிர்வீட்டு ஆண்டிட கேளுன்னாங்க...

### கவிசனா

உங்கள் உடம்பில் கோடிக்கணக்கான செல்கள் இருந்தாலும்...



ஒரு சொல்லில் கூட ஸிம் கார்ட் போட்டு பேச முடியாது... அது தான் வாழ்க்கை! வரட்டா...?

### சுகன்ஜா

வாய் எதுக்கும்மா?? பேசுறதுக்கு டா தங்கம்



வாம்மா... வந்து எங்க மிஸ் கிட்ட நல்லா சொல்லும்மா... எப்ப பாரு கிளாஸ்ல பேசாத பேசாதன்னு திட்டுறாங்க...

### றியான்சன்

எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்! "நடப்பதெல்லாம் நன்மைக்கேன்னு" சொல்லுறாங்களே...



எத்தனை கிலோ மீற்றர் நடந்தா நல்லது?

### தவராசா

ஏண்டா எல்லாப் பாடத்திலேயும் பெயிலாயிட்டியே உங்க அம்மா அடிக்க மாட்டாங்களா...?



ஐ அஸ்த பிஸ்கு... அடி வாங்கிறதுக்காகவே தான் எங்கப்பா இருக்காரு!

### சுமித்திரா

வேலை கிடைக்கிற வரைக்கும் வேலை கிடைக்கல்லையே என்று கஷ்டமா இருந்திச்சு



வேலை கிடைச்ச பிறகு வேலைக்கு போறதுக்கே கஷ்டமா இருக்குது...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# காணாமல் போனவன்



ரொம்ப வருடத்துக்கு முன்னர், காட்டிலே வயசான தாத்தாவும் பாட்டியும் இருந்தார்கள். தினமும் காட்டிலே இருக்கிற மரங்களை வெட்டி, விறகாக்கி அதை பக்கத்து கிராமத்திலே விற்று வந்தார் தாத்தா. ஒரு நாள் மதியம் ரொம்ப களைத்துப் போய் சாப்பிட உட்காந்தார். பாட்டி அவருக்கு கேழ்வரகுக் களி கொடுத்து அனுப்பி இருந்தார். களியை கையிலே எடுத்ததும் களி தவறிக் கீழே விழுந்து உருண்டு ஓடி விட்டது. பாவம் தாத்தா, அந்தத் தள்ளாத வயதிலே களியைத் துரத்திட்டு ஓடினார். களி ஒரு பொந்துக்குள்ள விழுந்து விட்டது. அது எலிப் பொந்து போல இருந்தது. ஐயோ இனி சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது என்று யோசித்தார். நல்ல பசி வேற. அப்ப திடீரென்று ஒரு அழகான எலி எட்டிப் பார்த்து... "மிக்க நன்றி தாத்தா" என்று சொன்னது. அட எலி பேசுதே என்று பார்த்தார். "நல்லா சாப்பிடுங்க எலி. அழகாக இருக்கீங்களே" என்று சொன்னாரு. எலி சிரிச்சிட்டு... "நீங்க எங்க அரண்மனைக்கு வருகிறீர்களா?" என்று கேட்டது.

"இந்த சின்ன பொந்துக்குள்ள நான் எப்படி வர முடியும்" என்று தாத்தா கீழே உட்கார்ந்துகொண்டார். கால்வலி இருந்தது போல. "என் வாலை பிடிச்சிக்கோங்க தாத்தா. கண்ணை மூடிக்கோங்க" என்று சொன்னது எலி. வாலை பிடித்துக்கொண்டார். கண்ணை மூடிக்கிட்டார்.

எங்கயோ பறக்கற மாதிரி இருந்துச்சு தாத்தாவுக்கு. "தாத்தா வாங்க வாங்க" அப்படி சத்தம் கேட்டு கண்ணைத் திறந்தார் தாத்தா. எலிக்களோட அரண்மனை தான் அது. நிறைய தங்கம் இருந்தது. எலிகள் சமைத்துக்கொண்டு இருந்தன. சில எலிகள் ஓடி ஆடி விளையாடிட்டு இருந்தன. சில எலிகள் சாப்பாட்டு பொருள்களை எங்கிருந்தோ எடுத்துக்கொண்டு வந்தன. எங்க பார்த்தாலும் தங்கமா இருந்தது. பெண் எலி ஒன்று வந்து "தாத்தா உங்களுக்கு பசிக்கும், இந்தாங்க சாப்பாடு" என்று சாப்பாடு கொடுத்தது. எலிகள் எல்லாம் பாட்டுப் பாடிக்கொண்டு இருந்தன.

"நாங்கள் இங்கே எலிகள்

நல்ல நல்ல எலிகள்

புனை சத்தம்வேண்டாமே

எங்கும் அமைதி வேண்டுமே

திலக்கலக்கா திலக்கலக்கா"

தாத்தா பாட்டு கேட்டுக்கிட்டே சந்தோசமாகச் சாப்பிட்டார். ராஜா போல இருந்த எலி ஒன்று தாத்தாவுக்கு மூட்டை நிறைய தங்கம் கொடுத்து அனுப்பியதாம். மறுபடியும் அதே எலி வாலை பிடிச்சிக்கிட்டு, கண்ணை மூடிகிட்டு பறந்து அவர் வீட்டுக்கு வந்துவிட்டார்.

வீட்டுக்கு வந்த தாத்தா, அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பாட்டியிடம் சொன்னார். தங்கத்தை எல்லாம் காண்பித்தார். பக்கத்து வீட்டில இருந்த ஒருத்தன் இதை எல்லாம் கேட்டான். அதே பொந்திற்கு போய் ஒரு களி உருண்டைய போட்டான். அதே எலி வந்தது, அதே போலவே அவனை அவங்க அரண்மனைக்கு கூட்டிட்டு போச்சு.

"நாங்கள் இங்கே எலிகள்

நல்ல நல்ல எலிகள்

பூனை சத்தம் வேண்டாமே

எங்கும் அமைதி வேண்டுமே

திலக்கலக்கா திலக்கலக்கா"

எலிகள் பாடும் சத்தம். அரண்மனையில எங்க பார்த்தாலும் தங்கமா இருந்துச்சாம். இவனுக்கு பேராசை. ஒரு மூட்டை தங்கம் மட்டும் பத்தாது, இதை எல்லாம் எடுத்துக்கலாம் என்று யோசித்தான். பெண் எலி இவனுக்கு சாப்பாடு எடுத்து வரும்போது "மியாவ் மியாவ்" என சத்தம் போட்டான். எல்லா எலியும் பயந்து எங்க போச்சென்றே தெரியல. கொஞ்ச நேரத்தில ஒரு எலியும் அரண்மனையில் இல்ல. எல்லா தங்கத்தையும் அள்ளி எடுத்தான். ஆனா அங்கிருந்து எப்படி வெளிய போறாதுன்னு தெரியல. இருட்டாக மாறிடுச்சு. கத்தி அழுது பாத்தான். ஒருத்தரும்வரலை. அவனை காணம்னு இன்னும் கூட தேடிட்டி இருக்காங்க பாவம்.

## தோழனே...!



என்னை பற்றி அறியாமலே
என் கவலைகளை உணர்ந்து
ஏணியாய் என்றும் என்னுடன் நின்று
எப்போதும் தோள் கொடுத்தவனே...

உன்னதமான நம் நட்பு
காரணமில்லாத காரணத்தினால்
ஏற்பட்ட ஊமையான ஒரு பிரிவால்
உயிரையே இழந்தது போல
தவிக்கின்றேன் நான்...

காதலர்கள் கூட சிலவேளை பிரியலாம்
காலங்களும் சிலபோது மாறலாம்
கால் தடங்கள் கூட அழியலாம்
கால்தூசி கூட நம் நட்பிற்கு
களங்கம் இல்லாமல் இருக்க
வேண்டாமா?

பிரிவு என்பது வெறும்
மூன்றெழுத்து சொல்லோ
பிரிவு பிரித்தாலும் நட்பு எனும்
மூன்றெழுத்தை பிரிக்க முடியாது
தோழனே...

**க.நந்திகா,**
**தரம் 11, யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்.**

## விடுகதைகளும் விடைகளும்

- தாடிக்காரன், மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?
  **தேங்காய்**
- ஒரு கிணற்றில் ஒரே தவளை அது என்ன?
  **நாக்கு**
- வால் உள்ள பையன், காற்றில் பறக்கிறான் அது என்ன?
  **பட்டம்**
- ஆனை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் சுவைக்கும் அது என்ன?
  **கரும்பு**
- பட்டுப்பை நிறைய பவுண் காசு அது என்ன?
  **மிளகாய்**
- கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன் அவன் யார்?
  **காற்று**
- தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்?
  **பென்சில்**
- சுற்றுவது தெரியாது. ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார்?
  **பூமி**
- வெள்ளை மாளிகையில் மஞ்சள் புஷ்பயல் அது என்ன?
  **முட்டை**
- குதிரை ஓட ஓட வால் குறையும். அது என்ன?
  **ஊசி நூல்**
- பூக்கும், காய்க்கும், வெடிக்கும். ஆனால் பழுக்க மட்டும் செய்யாது. அது என்ன?
  **இலவம்பஞ்சு**

## விபஸ்ஸனா நிலையத்தின் காணி உறுதியை ஜனாதிபதி மகாசங்கத்தினரிடம் கையளிப்பு



(கொழும்பு)

கொழும்பு 07. சர்வதேச விபஸ்ஸனா தியான நிலையத்தின் காணி உறுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நிலையத்திற்குப் பொறுப்பான வண. உடுதும்பர காஷ்யப்ப தேரரிடம் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளித்தார்.

இதுவரை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணியில் முன்னெடுக்கப்பட்டு வந்த விபஸ்ஸனாதியான நிலையத்தின் காணி உறுதியை 63 வருடங்களின் பின்னரே மகாசங்கத்தினரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புகழ்பெற்ற பொறியியலாளரின் தொழில்நுட்ப பூங்கா திறப்பு





(கொழும்பு)

இலங்கையின் புகழ்பெற்ற பொறியியலாளரான ஏ.என்.எஸ். குலசிங்கவின் நூறாவது ஜனன தினத்தை முன்னிட்டு பொறியியல் ஆலோசனை மத்திய பணியகம் மற்றும் பொறியியல் சேவைகள் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து நாட்டின் எதிர்கால தலைமுறையினரின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கோள் மண்டல வளாகத்தில் நிர்மாணித்துள்ள தொழில்நுட்ப பூங்காவினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

நினைவுப்பலகையை திரை நீக்கம் செய்து பூங்காவை திறந்து வைத்த ஜனாதிபதி அதனை பார்வையிட்டார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமது தொழிநுட்ப அறிவினூடாக பல்வேறு வெற்றிகளை பெற்ற நாட்டின் பொறியியலாளரான ஏ.என்.எஸ்.குலசிங்க, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் அமைப்பாளரும் அதன் முதலாவது தலைவருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உலகத்துக்கு பொன்சேகாவை வில்லனாக்கி ஹீரோவானவர்களே ராஜபக்ஷக்கள்

- உயிர்த்த ஞாயிறு தாக்குதலை கோத்தாவே மேற்கொண்டார்
- பொன்சேகா யுத்தம் செய்ய புத்தகம் எழுதிய கோத்தா

## கொலைகாரர்கள், திருடர்கள் என ரஞ்சன் கடும் தாக்கு



(வரக்காபொல)

கோத்தபாய ராஜபக்ஷ், பவ்ரல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட "ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒரு மேடை" நிகழ்ச்சிக்கு வராமல் ஒளிந்து கொண்டார் என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

வரக்காபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஒரேயொரு ஊடகச் சந்திப்பிற்கு வந்தார். த ஹிந்து ஊடகவியலாளர் யுத்தம் குறித்து கேள்வியெழுப்பினார். அதற்குக் கூட பதிலளிக்க முடியாமல் யுத்த வெற்றியை உலகிற்கு காட்டிக் கொடுத்தார்.

அங்கு தானோ, தனது சகோதரர் மகிந்த ராஜபக்ஷவோ யுத்தம் செய்யவில்லை. சரத் பொன்சேகாவே யுத்தத்தைச் செய்திருந்தார் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் 2009 ஆம் ஆண்டில் "Gota's War" என ஒரு புத்தகத்தை எழுதினார். சரத் பொன்சேகா யுத்தம் செய்ய கோத்தபாய புத்தகம் எழுதும் யுகம் அது.

கோத்தபாய நாட்டில் யுத்தம் நடக்கும் போது புதையல்களையும் விடுதலைப் புலிகளின் நகைகள், பணம் மற்றும் சொத்துக்களைத் திருடித்திரிந்தார். இதுதான் உண்மை.

இவர்கள் கொலையாளிகள், கொலை செய்வதற்கும் அஞ்சமாட்டார்கள். தௌஹீத் ஜமாத்துக்கு தமது அரசாங்கம் புலனாய்வுத் துறையினர் எனக் கூறி சம்பளம் கொடுத்தது என மகிந்த ஏற்றுக்கொண்டார்.

அவர்கள் பதவி ஆசையில் எதைச் செய்யவும் அஞ்சமாட்டார்கள். இவர்கள் யாரின் உயிரையும் பறிக்கத் தயங்கமாட்டார்கள். இவர்கள் பொட்டு அம்மானுக்கு சம்பளம் வழங்கியுள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டது கோத்தபாய ராஜபக்ஷவே.

இது முழு நாடும் தற்பொழுது அறிந்த விடயமாகும். உங்கள் பிள்ளைக்கு ஒரு மணமகனை தேடும் போது அவன் சிறந்தவனா? எனப் பார்ப்பீர்கள்.

நாட்டை ஆளும் பொறுப்புக்கூறும் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் போது வேட்பாளர்களின் பின்னணியை அறிந்து வாக்களிக்கவும்.

இவர் கொலை செய்துள்ளார், இவர் திருடன், இவரது பரம்பரை அமெரிக்கர்கள். அமெரிக்கக் குடியுரிமை பெற்றவருக்கு வாக்களிப்பீர்களா? அது உங்கள் முடிவு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)







மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பேசும் விரல்கள் கண்காட்சிக் கூடத்தை அதிபர் எஸ்.இந்திரகுமார் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

ஏதாவது ஓர் இலட்சியத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வையுங்கள். அந்த நம்பிக்கை அறிவுபூர்வமானதாக இருக்கட்டும். - ஸ்ரீஇராமகிருஷ்ணர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிக்கும் தீர்மானத்தை மக்களிடமே விட்டுவிடுங்கள்

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவர் என்பதை நிறுதிட்டமாகக் கூறமுடியவில்லை.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுக்கும் பொருட்டு, 13 அம்சக்கோரிக்கைகளுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற முக்கிய வேட்பாளர்களைச் சந்திப்பது என்றும் 13 அம்சக்கோரிக்கையை யார் ஏற்றுக் கொள்கின்றனரோ அவரை ஆதரிப்பது என்றும் ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் ஐந்து கட்சிகளின் கூட்டு என்பது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் பகைக்கக்கூடாது என்பதற்காக விருப்பமற்ற திருமணம் போல, ஐந்து கட்சிகளும் வேண்டா வெறுப்பாகக் கையெழுத்திட்ட கூட்டேயன்றி அதில் உண்மையான ஒற்றுமை இருக்கவில்லை.

உண்மையில் ஐந்து கட்சிகளின் கூட்டில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதை உள்நோக்கமாகக் கொண்டிருந்தது.

எனினும் அதனை வெளிக்காட்டாமல் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பைத் தாங்களும் ஏற்றுக்கொண்டது போல காட்டாப்புக் காட்டுவதற்காக 13 அம்சக் கோரிக்கையில் ஒப்பமிட்டது.

ஆனால் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது போல முக்கியமான ஜனாதிபதி வேட்பாளர்களை ஐந்து கட்சிகளின் கூட்டணி சந்திக்கவே இல்லை.

மாறாக நாங்கள் அவர்களிடம் போக மாட்டோம். விரும்பினால் அவர்கள் எங்களிடம் வரட்டும் என்று தமிழரசுக் கட்சி கூறியது.

இதனால் 13 அம்சக்கோரிக்கை என்ற விடயம் ஜனாதிபதி வேட்பாளர்களின் கைகளில் கிடைக்காமலேயே நாமே அதைக் கைவிட்ட கதையாக முடிந்தது.

இந்நிலையில் அவர்கள் எங்களிடம் வரட்டும் என்று கூறிய இலங்கைத் தமிழரசுக் கட்சி 13 அம்சக்கோரிக்கை பற்றி எந்தக் கருசனையும் கொள்ளாமல், சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது எனத் தீர்மானித்துள்ளது.

இது அந்தக் கட்சியின் முடிவு. இதுபற்றி நாம் கருத்துரைப்பதைத் தவிர்க்கலாம்.

எம்மைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற விடயத்தை தமிழ் அரசியல் கட்சிகள் பகிர்ந்தெடுத்து பக்கம் சார்ந்து அறிவிக்காமல், யாருக்கு வாக்களிப்பது என்ற பொறுப்பை தமிழ் மக்களிடம் கையளித்தால் அவர்கள் அதனைச் செம்மையாகச் செய்வார்கள்.

இவ்வாறு செய்வதன்மூலம் அரசியல் பகைமையைத் தவிர்க்க முடியும்.

தவிர, எம்மைப் பொறுத்தவரை தமிழ் அரசியல்வாதிகளை விட தமிழ் மக்களிடம் மிகுந்த அரசியல் ஞானம் உண்டு. ஆகையால் அவர்கள் தமது வாக்குகள் மூலம் சரியான தீர்ப்பை வழங்குவர்.

# ஜனாதிபதித் தேர்தலில் 13 டம்மி வேட்பாளர்கள்; கண்டுபிடித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில், இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், குறைந்தபட்சம் 13 போலி (டம்மி) வேட்பாளர்கள் போட்டியிடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு அடையாளம் கண்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

"இந்த போலி வேட்பாளர்களில் ஏழு பேர் முக்கியமான ஒரு வேட்பாளருக்கு ஆதரவாகவும், ஏனைய ஆறு பேர் மற்றொரு முக்கிய வேட்பாளருக்கு ஆதரவாகவும் போட்டியில் இறங்கியுள்ளனர். இவர்களுக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், முக்கிய வேட்பாளர்களின் மேடைகளில் காணப்பட்டனர்.

அதுதவிர, இந்த வேட்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், இரண்டு முக்கிய வேட்பாளர்களுக்கு ஆதரவான பரப்புரை பேரணிகளில் உரையாற்றியுள்ளனர்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதனால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிச்சுமை தேவையின்றி அதிகரித்துள்ளது.

வாக்குச்சீட்டு மிகவும் நீளமானதாக உள்ளது. மேலதிகமான வாக்குப் பெட்டிகளைப் பெற வேண்டியுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சந்திரிகா சுதந்திரக்கட்சியை பாதுகாக்கத் தேவையில்லை

## வீரகுமார விசனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு அமைப்பொன்றை சந்திரிகா ஆரம்பிக்க வேண்டிய தேவையில்லையென சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க தனித் திட்டம் இருக்க வேண்டிய அவசியமில்லை.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்கும் முடிவு நாட்டின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 5ஆம் திகதி நடத்தப்பட்ட இரகசிய கூட்டத்தை தொடர்ந்தே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஹக்கீம் மற்றும் றிசாத் ஆகியோர் இவ்வாறு செயற்படுகிறார்கள்.

அந்த இரகசிய கூட்டத்தில் கலந்து கொண்ட சூத்திரதாரிகளுக்கு வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பிரதேசங்களுக்கான மூன்று தனித் தனித் திட்டங்கள் உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது வடக்கிற்கான திட்டத்தை செயற்படுத்துகிறது. றிசாத் மற்றும் ஹக்கீம் கிழக்கிற்கான திட்டத்தைச் செயற்படுத்துகின்றனர். சுதந்திரக்கட்சியின் ஒற்றுமையை உடைத்து உள்மோதல்களை உருவாக்கும் தெற்கிற்கான திட்டத்தை சந்திரிகா செயற்படுத்துகிறார்.

இப்போதைய நிலைமையில் சுதந்திரக்கட்சியை பாதுகாக்கும் அமைப்பை சந்திரிகா ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை. தேவையெனில் சந்திரிகா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஹக்கீம், றிசாத் ஆகியோர் இணைந்து ஐ.தே.கவைப் பாதுகாக்கும் அமைப்பை ஆரம்பிக்கட்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புத்தளத்தில் உள்ள மன்னார் வாக்காளர்கள்

## தனியார் பேருந்துகளில் வாக்களிக்க வருவதற்குத் தடை

(மன்னார்)

புத்தளம் பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மன்னார் மாவட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வருவதற்கு இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளே ஒழுங்கு செய்யப்படும் என மன்னார் உதவி தேர்தல் ஆணையாளர் ஜெ. ஜெனிற்றன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்ட தேர்தல் தொகுதியில் வாக்காளராக பதிவு செய்யப்பட்டு புத்தளம் பகுதியில் வசித்து வருபவர்கள் கடந்த காலங்களைப் போன்று இம்முறை தனியார் பேருந்துகளில் வாக்களிக்க வருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஏனெனில் கடந்த காலங்களில் வாக்களிப்பு வேளைகளில் புத்தளத்திலிருந்து தனியார் பேருந்துகளை அரசியல் தலைவர்கள் வாடகைக்கு அமர்த்தி வாக்காளர்களை மன்னாரில் வாக்களிப்பதற்கு அழைத்து வருவதாகும். இவ்வாறு அழைத்து வரும்பொழுது வாக்காளர்களுக்கு உணவு, பணம் வழங்கப்பட்டு பிரசாரம் இடம்பெறுவதாக கடந்த காலங்களில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றை கவனத்தில் கொண்டு இம்முறை புத்தளத்திலிருந்து வாக்காளர்கள் மன்னாருக்கு வாக்களிக்க வருவதற்கு தனியார் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

வாக்காளர்களின் நலன் கருதி இ.போ.சபை பேருந்துகளின் சேவை ஏற்பாடு செய்யப்படவுள்ளது. தேர்தல் சட்டத்தை மீறி தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்து மூலம் வாக்காளர்களை அழைத்துவர விரும்பினால் தேர்தல் ஆணைக்குழுவிடம் அனுமதி பெற்றுவந்தாலே மட்டும் அனுமதிக்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

சுமார் 13 ஆயிரம் பேர் மன்னார் மாவட்டத்தில் வாக்காளர்களாக பதிவு செய்து புத்தளம் பகுதியில் இடம்பெயர்ந்து வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-285)

## பரிசளிப்பு விழா

(ஈச்சமோட்டை)

புன்னாலைக்கட்டுவன் ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று 6ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் சோ.ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் சி.ஜெயகாந், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம், கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன், கௌரவ விருந்தினராக யா/ ஸ்கந்தவரோதய கல்லூரி உப அதிபர் த.மோகன்ராஜ், உடுவில் பிரதேச சபை உத்தியோகத்தர் திருமதி சு.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-105)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், செட்டிகுளம் ஒரு பகுதி, முகத்தான்குளம், முதலியார்குளம், கப்பாச்சி, துட்டுவாகை, நேரியகுளம், தந்திரிமலை வீதி, சின்னசிப்பிக்குளம், அழகாபுரி, NW steel industries, இலுப்பைகுளம், கஜசிங்கபுர இராணுவ முகாம், பெரியகாடு, பீடியாபாம், மெனிக்பாம், ஆண்டியபுளியங்குளம் கிறிஸ்தவகுளம், சக்திகம, ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, சேமமடு, கொள்ளியன்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பணம் எப்போதும் துன்பத்தின் இருப்பிடமே. சம்பாதிக்கும் போதும் சரி, தானம் கொடுத்தாலும் சரி, செலவிட்டாலும் சரி, அது துன்பத்தையே தருகிறது. பணம் இன்பத்தைத் தருவதாக எந்த அறிவாளியும் கண்டதில்லை. - ஆதிசங்கரர்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப் போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்"

– மார்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# ஈழவேந்தன் அதிரடி ஆட்டம் இறுதிக்குத் தகுதி பெற்றது ரேஞ்சர்ஸ்



கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் பருத்தித்துறை லீக் மற்றும் வடமராட்சி லீக் அணிகளுக்கிடையிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் எதிர் இமையாணன் மத்தி அணிகள் மோதின.

இரு அணிகளும் அதிகமான இளம் வீரர்களைக் கொண்டதால் ஆட்டம் ஆரம்பத்தில் இருந்தே மிகவும் விறுவிறுப்படைந்தது. இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமிக்க பின்கள வீரர்கள் மற்றும் கோல் காப்பாளர்களினால் தடுக்கப்பட்டன.

ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் இமையாணன் மத்தி அணி வீரரின் முறையற்ற ஆட்டத்தினால் றேஞ்சஸ் அணிக்கு தண்டனை உதை கிடைத்தது.

இதனை ஆர்த்திகன் நேர்த்தியான முறையில் கோலாக்க 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சர்ஸ் அணி. ஆனாலும் அது நீடிக்கவில்லை.

ஆட்டத்தின் அடுத்த நிமிடமே றோர்ஞ்சஸ் அணியின் பின்கள வீரனின் முறையற்ற ஆட்டத்தினால் இமையாணன் மத்தி அணியினருக்கு நேர் உதை கிடைக்கவே அதனை சரியாகப் பயன்படுத்தி சதுர்சன் சிறப்பான கோலினை போட சமநிலையானது ஆட்டம் .

1:1 என்ற கோல் கணக்கில் தொடர விறுவிறுப்படைந்தது ஆட்டம். ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் மதுசாந்தின் சிறப்பான பந்து பறிமாற் றத்தை சுஜாஸ்கான் சிறப்பாக கோல் போட 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சர்ஸ் அணி.

மேலதிக கோல்களின்றி முடிவடைந்தது முதல் பாதியாட்டம். இரண்டாவது பாதி ஆட்டத்தின் 39 ஆவது நிமிடத்தில் வர்மன் சிறப்பாக பந்து பரிமாற்றம் செய்ய சரியாக பந்து பரிமாற்றத்தினை பெற்றுக் கொண்ட ஈழவேந்தன் மின்னல் வேகத்தில் அதிரடியாக கோலை போட 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சர்ஸ் அணி.

மேலும் விறுவிறுப்படைய 42 ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் முன்கள வீரன் ஆர்த்திகன் மீண்டும் தனது அணிக்கான 4 ஆவது கோலை போட 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஈழவேந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மன்னார் மாவட்ட FA கிண்ணம் விடத்தல்தீவு ஐக்கியம் சம்பியன்



மன்னார் மாவட்ட FA கிண்ண சுற்று தொடரின் இறுதி ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கியம் அணியை எதிர்த்து தாழ்வுப்பாடு சென்.அன்ரனீஸ் மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 05:04 என்ற கோல் கணக்கில் விடத்தல்தீவு ஐக்கியம் அணி வெற்றி பெற்றது. (க)

# அரையிறுதிக்கு தகுதி பெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி



அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தி வருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சக்தி வேல் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:01 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. நவஜீவன்ஸ் அணி சார்பாக சுஞ்சி 02, கௌறிஸ் 02 கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக விமல் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அரையிறுதிக்குள் நுழைந்தது நவிண்டில் கலைமதி அணி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தி வருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

கலைம்தி அணி சார்பாக அபி ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக விது தெரிவு செய்யப்பட்டார்.(க)




இன்ரமீடியேற் பளு தூக்கல் சம்பியன் சிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அணி சம்பியன்பட்டத்தை வென்றுள்ளது.

. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இப் போட்டியில் 49 Kg A பிரிவில் S.பிரியங்கா-வெள்ளி, 55 Kg A பிரிவில் M.குமுதாஞ்சலி-வெள்ளி,59 Kg A பிரிவில் V.அன்னலட்சுமி-வெள்ளி, 59 Kg A பிரிவில் U.ஜினோ ஜெலஸ்ரிக்கா-வெண்கலம், 71 Kg A பிரிவில் M.சந்தளாயக்கா-வெள்ளி, 71 Kg A பிரிவில் A.புசாயினி-வெண்கலம்,76 Kg A பிரிவில் G.ரஜனா-தங்கம்,76 Kg A பிரிவில் R.தசாந்தினி-வெள்ளி, 87 Kg A பிரிவில் J.கஸ்தூரி-வெள்ளி, +87 Kg A பிரிவில் M.பிருந்தா-வெள்ளி பதக்கங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிச் சாதனை படைத்துள்ளனர். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## பலத்த மழை...

வடக்கு அந்தமான் கடற்பிராந்தியம் மற்றும் தென்கிழக்கு கடற்பிராந்தியங்களில் நிலவும் தாழமுக்கம் எதிர்வரும் 6 மணித்தியாலங்களில் வடமேல் திசையை நோக்கி செல்லக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலை எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் சூறாவளியாக மாறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக இந்த கடற்பிராந்தியங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம-3)

## ஆவா குழு உறுப்...

பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் பல வருட காலமாக ஆவா குழு என்ற அமைப்பினால், பல்வேறு வாள்வெட்டுக்கள் இடம்பெற்றதுடன், பல கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றன. இக்குழுவின் பிரதான நபரென கருதப்பட்ட ஆவா வினோத் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தின் குற்றவாளியாக கருதப்பட்ட இவர் அந்த வழக்கின் குற்றவாளியாக மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்துள்ளார். சரணடைந்த இவர் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகள் தொடர்பாக, எந்தெந்த பொலிஸ் நிலையத்தில் வழக்கு விசாரணைகள் நிலுவையில் உள்ளன என்பது தொடர்பான அறிக்கைகள் அந்தந்த பொலிஸ் நிலையங்களினால் மல்லாகம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,10,101)

## 23 பவுன் நகை...

வத்தை, பொலிகண்டி பகுதியில் பட்டப்பகலில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் காலையில் வீட்டினை பூட்டிவிட்டு அலுவலகம் சென்ற நிலையில் பிற்பகல் வீட்டுக்கு வந்த போது வீட்டுக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த 23 பவுண் தங்க நகை திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து பொலிஸார் மோப்ப நாய் சகிதம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60)

## 20 பட்டதாரி...

வுக்கு உட்பட்டுள்ளதாகவும், புதிய திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு கோரியுள்ளதாகவும் அமைச்சரவைக்கு பத்திரம் முன்வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு உயர் கல்விக்கு உட்பட்டிருந்தாலும், 20 பட்டதாரிகளும் "சிவில் சமூகங்களால் தங்கள் தகுதி நிலை ஏற்றுக்கொள்ளாததால் வேலைவாய்ப்பைப் பெற முடியவில்லை" என்று அமைச்சரவை பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் உள்ள மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சால் இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது. (ம-3)

## விபத்துக்குள்...

துள்ளார்.

இச்சம்பவத்தில் சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி சிவகணேசன் (வயது-25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மோட்டார் சைக்கிளில் மட்டுவில் தெற்கு கண்ணன் கோவில் வீதியால் சென்று கொண்டிருந்த போது நாய் குறுக்கே பாய்ந்ததில் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிசிக்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணைய யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

இதேவேளை நேற்றைய தினம் நெடுந்தீவு 5ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த குணரத்தினம் ரத்தினதிலகம் (வயது-35) என்ற இளம் பெண் காசநோய் காரணமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இருவரது மரண விசாரணையை தீவக திடீர் மரண விசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா மேற்கொண்டார். (ம)

## 2015 இன்...

பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது பிரதமர் மேலும் தெரிவிக்கையில், "கோத்தபாய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் சொல்கின்றார்கள், தாங்கள் வெற்றிபெற்றால் பிள்ளையானை முதலமைச்சராக்குவோம் என்று.

நாங்கள் எல்லாப் பதவிகளையும் முஸ்லிம்களுக்கு வழங்கப் போகின்றோம் என்றும் அதனால் கிழக்கு முதலமைச்சர் பதவியை பிள்ளையானுக்கு வழங்கப் போகின்றோம் என்றும் அவர்கள் சொல்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு முதலமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை இருக்கின்றது. அதே உரிமை முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இருக்கின்றது.

இறுதியாக தமிழ், முஸ்லிம், சிங்களம் என்பதைவிட வேலைசெய்யக்கூடிய முதலமைச்சர்தான் தேவை. தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டுமாக இருந்தால் அதனை தமிழர்கள்தான் முடிவுசெய்ய வேண்டுமே தவிர கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்ய முடியாது.

ராஜபக்ஷவினர் இப்போது தமிழ் மக்களின் உரிமை பற்றிப் பேசுவதற்கு மிகவும் விருப்பப்படுகின்றார்கள். அப்படியானால் தமிழில் தேசிய கீதத்தை பாடுவதற்கு நாங்கள் வழிவகை செய்தபோது ஏன் அதனை எதிர்த்தீர்கள்?

எதிர்வரும் 16ஆம் திகதி அன்னப் பறவை சின்னத்துக்கு சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினால் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும். அத்துடன் சுதந்திரத்தைப் பாதுகாத்து இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றார். (ம)

## சிங்க...

சியை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றார். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலகெதர நகரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் தேர்தல் கொள்கை பிரகடனம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் தேர்தல் கொள்கை அனைத்து இன மக்களுக்கும் பொதுவானதாகவும் பொருளாதாரத்தினை முன்னேற்றுவதாகவும் காணப்படுகின்றது. ஆனால் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் கொள்கைப் பிரகடனம் ஒரு தலைபட்சமானது.

இலங்கை தமிழரசுக் கட்சி புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

**இவர் ஊடகங்களுக்கு சிங்கள மொழியில் ஒரு விதமாகவும், தமிழ் மொழியில் பிறி**தொருவிதமாகவும் கருத்துரைத்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் கொள்கை பிரகடனத்தில் சிங்கள மொழியில் ஒருமித்த நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்மொழியிலும், ஆங்கில மொழியிலும் சமஷ்டி முறைமையினை தோற்றுவிப்பதற்கான வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு இனத்தினை ஏமாற்றும் செயற்பாடாகும். எனவே நாடு மீண்டும் பிளவு படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று அவர் கூறினார். (ம-3)

## சுதந்திரக் கட்சி...

மன்ற உறுப்பினர் குமார் வெல்கம, எந்த ஒரு காரணத்திற்காகவும் தான் தாமரை மொட்டிற்கு வாக்களிக்க மாட்டேன் என குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகா தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்நிலையில் நேற்றைய மாநாட்டில் பெருமளவு உறுப்பினர்கள் கலந்து கொண்டமை மகிந்த அணிக்கு பெரும் பின்னடைவு என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம)

## சஜித்தின்...

கொள்கையில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித்தின் கொள்கைத் திட்டம் சிறப்பானது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கும் அமைப்பின் மாநாடு நேற்று சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இதன்போதே சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடு அரசியல் ரீதியிலும் பொதுமக் களின் வாழ்வியல் ரீதியிலும் தீர்மானங்களை முன்னெடுக்கும் தீர்க்கமான தருணத்தில் தற்போது உள்ளது.

இரண்டு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் கொள்கை பிரகடனத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்துள்ளேன்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் மனித உரிமைகளுக்கும், மக்களின் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளமை பெரும் நகைப்பிற்குரியதாக காணப்படுகின்றது.

10 வருட கால குடும்ப ஆட்சியில் மனித உரிமைகளும், மக்களின் பாதுகாப்பும் எவ்வாறு காணப்பட்டது என்பதை நாட்டு மக்கள் இன்றும் மறக்கவில்லை.

எனக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் எதிராக சுதந்திர கட்சியின் தலைவர் அல்ல பொதுச்செயலாளருக்குக் கூட ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது.

ஒருவேளை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அதனை சட்டத்தின் ஊடாகவே வெற்றிக் கொள்வேன். ஒருபோதும் குறுக்கு வழியில் செல்லமாட்டேன் என்றும் அவர் இதன்போது கூறினார். (ம)

## நாட்டின் ஐக்கியத்...

வின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த குற்றச்சாட்டிற்கு புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தலாத்து

04

























## தேவை

1.மேசன் வேலை, பெயின்றிங்வேலை தொழிலாளிகள்.
2. மாபிள் வேலை தெரிந்தவர்கள்.
தொடர்புகளுக்கு : 076 554 1472 (878)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8116)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## கணித வகுப்பு

O/L வகுப்பு மற்றும் O/L மறுபடியும் தோற்ற விரும்புவோருக்கான குறுகிய கால மீட்டல் பயிற்சி Paper Class வகுப்புக்கள் தனியாக- OR குழுவாக பல வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுவந்து கற்பிக்கப்படும்.
Model Papers, Past Papers என்பனவும் பயிற்சிப் பரீட்சை என்பனவும் கற்பிக்கப்படும்.
கோண்டாவிலில் தனியான மற்றும் குழு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (866)
தொடர்புகளுக்கு:- 077 649 8444

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /-Kg
கனடா - 950 /-Kg
ஜேர்மனி - 650 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
இத்தாலி - 700 /-Kg (C-8115)
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • மாங்குளம் • சாவகச்சேரி • முல்லைத்தீவு • திருகோணமலை • வவுனியா • மன்னார் • பருத்தித்துறை • மருதங்கேணி
0768226240 V2 TRAVELS

எமது பட்டயக் கணக்காளர்கள்
**Chartcred Accountants**
நிறுவனத்துக்கு கணக்கியல் பயிலுனர்கள் தேவை.
Chartcred, CIMA, HNDA மாணவர்கள் A/L Commerce சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு :
077 953 0496 (878)

3 - 6 மாதத்தில் வெளிநாட்டு வேலை & விசா உடன்

WORK VISA
Malaysia, Romania
Dubai, Kuwait, Oman
Qatar, Saudi Arabia
STUDENT => WORK VISA
Australia, Canada,
New Zealand
Switzerland, Germany
TVEC & UK Certified
Tourism & Hospitality Management
ஹொட்டேல் முகாமைத்துவம்
FAST TRACK – ENTRY LEVEL – ADVANCED LEVEL
3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச
FREE ENGLISH அடிப்படையிலிருந்து IELTS வரையில்
விளக்க கருத்தரங்கும் பதிவுகளும் நவம்பர் 9 சனி 0773616798
அனுமதி இலவசம் 50-100% கட்டண தழுவுகள்
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். இவோரா ஸக்ஸ் - நீள் நேர் அருகே
SIKARAM ACADEMY 021 221 9 221 (C-8143)

## ஆங்கில ஆசிரியை தேவை

8ஆம் வகுப்பு மாணவிக்கு வீட்டில் வந்து கற்பிக்கக் கூடிய ஆசிரியை தேவை.
தொடர்பு : 077 034 9678 (875)

Personal-Group Classes
2D-DRAWING-3D-MODELING
Technical Officers, Surveyors, Architect, Draughtsman, Engineers
University of Peradeniya
University of Moratuwa
JAFFNA VAVUNIYA
Auto CAD
LINK: 076 9000064 / 071 8617972 (C-8137)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (868)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8109)


# சஜித்தை ஆதரிக்க புளொட் முடிவு

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிகக புளொட் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சி தனித்து தீர்மானத்தை அறிவிக்காது கூட்டமைப்பாக இணைந்து தீர்மானத்தை அறிவித்திருந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாம் ஏற்கனவே ஒரு தீர்மானத்தை எடுத்து அதில் உறுதியாக உள்ளோம். இது ஒரு மாதத்துக்கும் முன்னமே எடுக்கப்பட்ட தீர்மானம். அதாவது நாம் இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பது. அதில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதே சரியான தெரிவு என்பதை நாம் கூறிவிட்டோம். இப்போதும் நாம் அந்த தீர்மானத்தில் உறுதியாக உள்ளோம்.

எமது நோக்கம் என்னவெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளருடன் நிற்க வேண்டும் என்பதே. அதில் எமது தலைமைகள் தனித்தனி தீர்மானம் எடுக்க வேண்டியதில்லை. கூட்டமைப்பாக ஒரு தீர்மானத்தை வெளிப்படுத்தியிருந்தால் இன்னமும் ஆரோக்கியமானதாக இருந்திருக்கும் என்றார். (ம-3)


## பங்குச்சந்தை முதலீடு அடிப்படைகள் - பகுப்பாய்வுக் கருத்தரங்கு

எதிர்வரும் 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 - 11.30 மணி வரை,
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையில், கே.கே.எஸ் வீதி.
பதிவுக்கட்டணம் Rs.500.00
அழையுங்கள்: 021 222 1455, 077 782 2014 (stock & send sms)
CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம் (C-8135)


# மரண அறிவித்தல்



சம்பந்தர்கடை வீதி,
(கரவெட்டி மத்தி ப.நோ.கூ.சங்கம் அருகில்)
கரவெட்டி.

## திருமதி புஸ்பராணி சங்கரப்பிள்ளை

(ஓய்வு நிலை மூத்த ஆசிரியர் - யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி புஸ்பராணி சங்கரப்பிள்ளை (ஓய்வுநிலை மூத்த ஆசிரியர் - யா/உடுத்துறை மகா வித்தியாலயம்) அவர்கள் நேற்று (05.11.2019) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.சங்கரப்பிள்ளை (முன்னாள் அதிபர் யா/ உடுத்துறை மகா.வித்தியாலயம்) அவர்களின் நேசத்திற்குரிய மனைவியும், காலஞ்சென்ற அல்பிறெட் தம்பிராசா சட்டம்பியாரின் அன்புப் பேர்த்தியும், றெபேட் செல்வநாயகம் - லில்லி மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், வடமராட்சி கிழக்கு வேம்படியை (உடுத்துறை - வத்திராயன்) சேர்ந்த பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஸ்ட மருமகளும், புஸ்பகுமார் (U.K), காலஞ்சென்ற புஷ்பாகரன், புஷ்பமாலா (முன்னாள் சமுர்த்தி உத்தியோகத்தர்) அவர்களினது அன்புத் தாயாரும், திருமதி அம்மன்கிளி (முன்னாள் உத்தியோகத்தர், கிராமிய வங்கி நெல்லியடி - கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம்), திருமதி கனகசிறி (நந்தா - ஆசிரியை, நாகர்கோவில் மகா வித்தியாலயம்), S.M கண்ணகுமார் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாரும், எழில், மகிழினி, மயூரிகா, மகீந்தன், சங்கரதாஸ், கர்ஜன் ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்ற பத்மநாதன், கிருபைநாதன், அற்புதராணி, நித்தியநாதன் (முன்னாள் சிரேஷ்ட உத்தியோகத்தர் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொ.கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை பிரதம தபாலதிபர் கிளிநொச்சி மாவட்ட தபாலகம்) பொ.குமாரசாமி (விசுவமடு) திருமதி தவமலர் மகேந்திரன் (பிரதம தாதி, மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி) ஆகியோரின் அருமை அண்ணியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க இறுதி ஆராதனைகள் இலங்கை திருச்சபையினரால் சிரேஷ்ட மகனின் இல்லத்தில் (சம்பந்தர் கடை வீதி, கரவெட்டி மத்தி ப.நோ.கூ.சங்கம் அருகில் கரவெட்டி) என்னும் முகவரியில் இன்று (06.11.2019) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் என்பந்த உற்றார், உறவினர்கள், குடும்பநண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : 077 808 4475

தகவல் - குடும்பத்தினர்

(C-8141)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.